Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு +IV

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நாங்கள் தரத்திற்கும் நேரத்திற்கும் மதிப்புக் கொடுப்பவர்கள்

UNIT

கொழும்பு விலையில் கணனிகள்

கடைசிப் பக்கம் பார்க்கவும்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 17 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 18 (02.11.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 33

## பேச்சு மேசையில் இரு திட்டவரைபுகளா?

# நகைப்புக்கிடமானது எனக் கூறி விடுதலைப் புலிகள் நிராகரிப்பு!

(கிளிநொச்சி)

பேச்சுவார்த்தை மேசையில் விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி வரைபுடன் அரசாங்கத்தின் மாற்றுத்திட்டத்தையும் ஆராய்வதென்பது நகைப்புக்கிடமானது. இரண்டு திட்டங்களை வைத்து ஆலோசனை நடத்தினால் எந்த முடிவுக்கும் வரமுடியாது. இதனைத் தமிழ்மக்களோ புலிகளோ ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷியுடன் நேற்று சந்திப்பொன்றை நடத்தினார். நேற்று முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை கிளிநொச்சி சமாதான செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனும் தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கனும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஜப்பானிய சிறப்புத் தூதுவர் அகாஷியுடன் ஜப்பானிய வெளியுறவு அமைச்சின் தென்மேற்கு அரசியல் விவகாரப் பிரிவின் இயக்குநர் யசுகாஸ் சுட்டா, தென்மேற்கு ஆசிய விவகார ஜப்பானிய வெளியுறவு அமைச்சின் அதிகாரி சுகேஜிஜான்றாக்கா, இலங்கைக்கான ஜப்பானியத் தூதர் அகியோ சுடா மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஐரோப்பியப் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றுக் காலை தாயகம் திரும்பிய பின்னர் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புக் குறித்து ஊடகவியலாளர்களுக்கு தமிழ்ச்செல்வன் பேட்டியளிக்கையில் –

இன்று ஜப்பானிய விசேட தூதரையும் அவருடன் வந்த ஜப்பானியத் தூதுக் குழுவினரையும் சந்தித்துப் பேசியிருக்கிறோம்.

இவர்களுக்கு எங்களுடைய நிலைப்பாடுகளைத் தெளிவாக விளக்கியிருக்கிறோம். தலைமைப்பீடத்தினது நிலைப்பாடு என்ன என்பதையும் இன்றுள்ள நெருக்கடி

(12 ஆம் பக்கம் பார்க்க)



## காத்தான்குடி கிரனேட் வீச்சில் இருபது பேருக்குப் படுகாயம்!

மட்டக்களப்பு - காத்தான்குடி இரும்பு தைக்கா பள்ளிவாசல் மீது நேற்றிரவு 10.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் 20 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் அங்கு இடம்பெற்றுவரும் மோதல் சம்பவங்களில் மேலும் பலர் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை உட்பட பல்வேறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி காயமடைந்தவர்களில் 15 பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும், நால்வர் காத்தான்குடி வைத்தியசாலையிலும், ஒருவர் ஆரையம்பதி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்தச் சம்பவங்களில் காய

## கோழிக்கூட்டில் பாய்ச்சப்பட்டிருந்த மின்சாரத்தில் சிக்கி இருவர் பலி!

(உடுவில்)

உடுவில் - மல்வம் பகுதியில் நேற்று அதிகாலை கோழிக்கூட்டிற்குப் பாய்ச்சப்பட்டிருந்த மின்சாரத்தில் சிக்கி இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

உடுவில் - மல்வம் முருகமூர்த்தி பாடசாலைக்கு அருகிலுள்ள வீடொன்றில் அண்மைக்காலமாகக் கோழிகள் திருடப்பட்டுவந்தன. கடந்த 29 ஆம் திகதியும் இங்கிருந்த பெருமளவு கோழிகள் திருடப்பட்டிருந்தன.

உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. இவர்களுடன் சென்றதாகக் கூறப்படும் மேலும் சிலர் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸாரிடம் முறையிடப்பட்டதையடுத்து அந்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தின்போது பாலசுப்பிரமணியம் ஆனந்தபாபு (வயது 18, திருமணமாகி 6 மாதங்கள்), கந்தசாமி மோகன் (வயது 24, 3 பிள்ளைகளின் தந்தை) ஆகியோரே உயிரிழந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

## மாகாண ஆளுநரின் யாழ். விஜயம் ரத்து!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் எதிர்ப்பை அடுத்து யாழ். குடாநாட்டுக்கு நாளை விஜயம் செய்யவிருந்த மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன தனது விஜயத்தை ரத்துச் செய்துள்ளார்.

நாளை யாழ்ப்பாணம் வரவிருந்த ஆளுநர் அசோக ஜெயவர்த்தன, யாழ். குடாநாட்டில் பல்வேறு அரச அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடுவதுடன் குடாநாட்டின் பலபகுதிகளுக்கும் செல்லத் திட்டமிட்டிருந்தார்.

ஆனாலும் இவர் தனது இந்த விஜயத்தை ரத்துச் செய்ததையடுத்து நாளை இவர் பங்குபற்றவிருந்த நிகழ்வுகளும் ரத்துச் செய்யப்பட்டன.

இதன்படி காயமடைந்தவர்களில் 15 பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும், நால்வர் காத்தான்குடி வைத்திய சாலையிலும், ஒருவர் ஆரையம்பதி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்தச் சம்பவங்களில் காயமடைந்த மேலும் பலர் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு நேற்றிரவுமுதல் எடுத்துச்செல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் மேலும் ஒரு பள்ளிவாசல், பாலர் பாடசாலை மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பன அடித்து நொருக்கிச் சேதமாக்கப்பட்டன.

வருவதாவது -

உடுவில் - மல்வம் முருகமூர்த்தி பாடசாலைக்கு அருகிலுள்ள வீடொன்றில் அண்மைக்காலமாகக் கோழிகள் திருடப்பட்டுவந்தன. கடந்த 29 ஆம் திகதியும் இங்கிருந்த பெருமளவு கோழிகள் திருடப்பட்டிருந்தன.

இதனால் திருட்டைத் தடுக்க கோழிப் பண்ணை உரிமையாளர் கோழிக்கூட்டில் மின்சாரம் பாய்ச்சியிருந்தார் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் மின்சார வேலியில் சிக்கிய இரு இளைஞர்கள் அந்த இடத்திலேயே

இந்தச் சம்பவத்தின்போது பாலசுப்பிரமணியம் ஆனந்தபாபு (வயது 18, திருமணமாகி 6 மாதங்கள்), கந்தசாமி மோகன் (வயது 24, 3 பிள்ளைகளின் தந்தை) ஆகியோரே உயிரிழந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிவான் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்திய பின்னர் சடலங்கள் வைத்தியப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

(101, 87)

கலந்துரையாடுவதுடன் குடாநாட்டின் பலபகுதிகளுக்கும் செல்லத் திட்டமிட்டிருந்தார்.

ஆனாலும் இவர் தனது இந்த விஜயத்தை ரத்துச் செய்ததையடுத்து நாளை இவர் பங்குபற்றவிருந்த நிகழ்வுகளும் ரத்துச் செய்யப்பட்டன.

ஆளுநரின் யாழ். குடாநாட்டு விஜயத்தை பல்வேறு பொது அமைப்புக்களும் எதிர்த்ததுடன், அவர் யாழ்.குடாநாட்டுக்கு வருகை தந்தால் மாபெரும் எதிர்ப்பு போராட்டத்தை நடத்தப் போவதாகவும் எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது.



# இந்திய இராணுவத் தளபதி கொழும்பில் முக்கிய பேச்சு!



(கொழும்பு)

நான்கு நாள் விஜயமாக நேற்றுக்காலை கொழும்பு வந்தடைந்த இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் என்.சி.விஜ் தலைமையிலான இராணுவ அதிகாரிகள் குழுவினர் இலங்கையின் அரசியல், இராணுவ மட்டங்களில் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

காலை 10 மணியளயவில் கட்டுநாயக்கவை வந்தடைந்த இவருக்கு இராணுவத் தலைமையகத்தில் அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.

இதன்பின்னர் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொடவை இராணுவத் தலைமையகத்தில் சந்தித்து இந்திய இராணுவத் தளபதி பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது - இருதரப்பு இராணுவ உறவுகள், பயிற்சிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. இந்தப் பேச்சுக்களில் மேஜர் ஜெனரல் சூல செனிவிரத்ன, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்திய இராணுவத் தளபதி தலைமையிலான குழுவில் நடவடிக்கைப் பிரிவு பிரதி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஏ.எஸ்.செகோன், பிரிகேடியர் ரஷீத் இலாயத்துல்லா, மேஜர் ஆபிரகாம் ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

அதன்பின்னர் - வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை அவரது அமைச்சுக்குச் சென்று சந்தித்தார். அங்கு சுமார் அரை மணித்தியாலத்துக்கு மேலாகக் கலந்துரையாடினார்.

அதன்பின்னர் - இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ்வையும் அவர் சந்தித்தார்.

இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேராவையும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்தையும் இந்தியத் தளபதி விஜ் சந்திக்கவுள்ளார்.

நாளை இவர் அநுராதபுரத்துக்கும், வவுனியாவிலுள்ள இராணுவத் தளங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# வேலணையில் கடற்படையினர் அமைத்த தற்காலிக வீதியால் மாணவர்கள் சிரமம்!

வேலணை ஊர்காவற்துறை பிரதான வீதியில் கடற்படையினரின் முகாம் இருப்பதால் இந்த வீதி கடந்த பல வருடங்களாகத் தடைப்பட்டுள்ள நிலையில் தற்போது இராணுவ வலயத்தைச் சுற்றி தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீதியால் பயணம் செய்வதில் பொது மக்களும், மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியில் இரண்டு பிரபல பாடசாலைகள் அமைந்துள்ளதுடன் இந்தத் தற்காலிக வீதி தனியாருடைய வயற்காணிகள் ஊடாகவே அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தற்போது ஆரம்பித்துள்ள பருவமழை காரணமாக இந்தத் தற்காலிக வீதி பெரும் சேறும் சகதியுமாகியுள்ளது.

இதன் காரணமாக இந்த வீதியால் பாடசாலைக்கு வரும் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் சேறு படிந்த ஆடைகளுடன் பாடசாலைக்கு வருவதையும் காண முடிகின்றது.

அத்துடன், இந்தப் பாடசாலைகளுக்கு வரும் ஆசிரியர்களும், மாணவர்களும் கடும் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்பே பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதாகவும், இதன் காரணமாக இந்தப் பாதையால் செல்ல மாணவர்கள் அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (99)

## யாழ்.குடாநாட்டின் முன்பள்ளி ஆசிரியர்களின் தரத்தை மேம்படுத்தும் செயற்திட்டம் ஆரம்பம்!

தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து யாழ்.குடாநாட்டிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான செயற்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளன.

யாழ்.குடாநாட்டில் முன்பள்ளிகளில் பயிற்றுவித்துவரும் ஆசிரியர்களுக்கு துறைசார் வழிகாட்டல் கருத்தரங்குகள் வழங்கப்படாமையால் யாழ்.குடாநாட்டு முன்பள்ளி சிறார்களின் கற்றல் மற்றும் கல்வி சார் செயற்பாடுகளில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதனைக் கவனத்திற்கொண்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து இந்தச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதனடிப்படையில் யாழ்.குடாநாட்டில் முன்பள்ளிகளில் கற்பித்தலில் ஈடுபட்டுள்ள 1178 ஆசிரியர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு முன்பள்ளி கற்பித்தல் நடவடிக்கைகள் குறித்து பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன. (17)

## சுயதொழில் முயற்சிக்கு சமுர்த்தி வங்கி கடனுதவி!

சாவகச்சேரி பிரதேச மக்களுக்கு சுயதொழில் முயற்சியை மேற்கொள்ளும் பொருட்டு சமுர்த்தித் திட்டத்தின் ஊடாக கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 49 பயனாளிகள் கடன் உதவிகளைப் பெறவுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் 21 சுயதொழில் முயற்சியாளர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 11 முயற்சியாளர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவிருக்கிறது. 17 முயற்சியாளர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா கடனாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (122)

## உடுவில் நூலகத்தில் சிறுவர் பகுதி ஆரம்பம்

(உடுவில்)

வலிதெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலக நூலகத்தில் சிறுவர் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சனி, ஞாயிறு தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணிவரை சிறுவர் பகுதி திறந்து செயற்படுகிறது. தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சிறுவர்கள் இங்கு வந்து நூல்களை வாசிப்பதைக் காண முடிகிறது.

மாணவர் வருகை அதிகரிக்கும் பட்சத்தில் திறந்திருக்கும் நேரமும் அதிகரிக்கப்படுமென நூலகர் எஸ். வைகுந்தநாதன் தெரிவித்தார். (101)


யாழ்.மாவட்டத்தில்
சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
தமிழ் மாணவர் ஒன்றியம் ~ யாழ். மாவட்ட வலயக் கல்விப் பணிமனைகளின் இணைந்த ஆதரவுடனும்,
கிளிநொச்சி மாவட்டத்தில்
தமிழ் மாணவர் ஒன்றியம் ~ கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை ஆகியவற்றின் இணைந்த ஆதரவுடன்
நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
க.பொ.த. (சா/ த) - 2004 டிசம்பர்
பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான
முன்னோடிக் கருத்தரங்குகளை
(பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும்)
யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும்
இலவசமாக நடாத்த உள்ளது.

மேலதிக விபரங்கள் வெகு விரைவில்
நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்

பாடசாலை பரீட்சார்த்திகளும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும்
இக் கருத்தரங்கில் பங்குபற்றலாம்

யாழ்.மாவட்டத்துக்கான இணை அனுசரணை

45 வருடகாலசேவையில் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ் 212, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.

BOC தேசத்தின் வங்கியாளர் இலங்கை வங்கியின் 18 plus இளம்பருவத்தினருக்கு அன்புடன்....

SICS கணினி சேவைகள் இல.125A ,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எங்களின் நோக்கம், உங்களின் தொழில் நுட்பமுன்னேற்றம்.

COMMERCIAL BANK Our Interest Is In You

UNIT 347, K.K.S. Road, Jaffna

Global Info IDM (PVT) LTD., Authorized ICT Education JAFFNA CENTER IDM 451, K K S ROAD, JAFFNA TP: 021-459 398

Softview Computer College 43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna

S.T.P 73, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

சொலெக்ஸ் பல்மூக்கு கண்ணாடியகம 516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம 302, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

IIS 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 2831



நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான

ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் நடித்த (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
3 ஆவது ஜனத்திரள் வாரம்
இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான
ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த
7/G ரெயின்போ காலனி
இது ஒரு உண்மைக் கதை
பு.நே 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்
ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், விஜயகுமார், ஆனந்தபாபு, மஞ்சுளா நடிப்பில
சேரன் பாண்டியன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
DARE DRAVIN
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.45, (பு.நே)
(சி-2723)

மலிவு மலிவு கொள்ளை மலிவு
வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க
தீபாவளி பண்டிகையை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
(16~10~04) தொடக்கம் 11~11~2004 வரை
சகல விதமான உடுபுடவைகள் மற்றும் ரெடிமேட் உடுப்புக்களையும்
பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.
லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி ,
யாழ்ப்பாணம்.
222-2381
(C/3909)



31 ம் நாள் நினைவாக...



அமரர் வைத்திலிங்கம் குருசாமி
(உதயசூரியன் வீதி, உடுவில்)
25.10.1940 - 03.10.2004

இப்படித்தான் வாழ வேண்டுமென்று தூய வழி நடத்தியதால் சோதனைகளையும், வேதனைகளையும் தாண்டி நாம் சென்றபோதும் நிறையாத வேளையில் நீங்கள் பிரிந்ததேனோ!

இவ்வுலக வாழ்வை நீத்த எமது தந்தையின் இறுதிப்பயணத்தில் சகல விதத்திலும் உதவிநின்ற அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

02.11.2004 எமது இல்லத்தில் நடைபெறும் 31ம் நாள் நினைவு நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

உதயசூரியன் வீதி, உடுவில். மனைவி, பிள்ளைகள்.



திறப்புவிழா அழைப்பிதழ்



எனது அன்பிற்குரிய மாணவர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும், 03.11.2004 அன்று புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இந்தியாவில் கணனிப் பொறியியல் துறைப் பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு தசாப்த காலமாக கணனியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாம் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் IBM, Microsoft, Sun Micro Systems, Cisco, Compaq, AT&T Labs, Intel மற்றும் HP நிறுவனங்களின் நேரடியாக இணைத் தயாரிப்பில் ஈடுபட்டு தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் விற்பனை மற்றும் சேவைகளை வழங்கவுள்ளோம். அனைத்து மாணவர்களும், நண்பர்களும் தவறாது இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன.

க.உதயகுமார்

UNIT
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
மேலதிக விபரங்களுக்கு UNIT விளம்பரத்தைப் பார்க்கவும்

## தனது உரை தொடர்பாக

# பிரதி அமைச்சர் டிலான் பெரேரா பிழையாக கருத்து கொண்டுள்ளார்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



ஜனாதிபதிக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் தான் ஆற்றியதாக கூறப்படும் உரை தொடர்பாக தெளிவாக விளங்கிக் கொள்ளாமல் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றம்சாட்டியுள்ளார்.

கடந்த காலத்தில் நிறைவேற்று அதிகாரங்களை ஜனாதிபதி உரிய முறையில் பயன்படுத்தாமல் இருந்தமையைக் குறிப்பிடுவதற்காகவே தாம் ஜனாதிபதியின் சரீர இயல்புகள் குறித்துக் கருத்துத் தெரிவித்ததாக விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சரீர இயல்புகள் குறித்து விமல் வீரவன்ச குறிப்பிட்டிருந்தமை விசனத்திற்குரியது என பிரதி அமைச்சர் டிலான் பெரேரா குற்றம்சாட்டியிருந்தார்.

ஜனாதிபதிக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது தொடர்பாக பிரதி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தவறான வழிநடத்தல் என விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக டிலான் பெரேரா அறிக்கை வெளியிட்டுள்ள மையினாலும், இந்தச் செய்தி தொடர்பாகப் பதற்றம் அடைந்தாரா அல்லது யாராவது ஒருவரால் பதற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டாரா என்று அறிந்து கொள்ளமுடியாது இருப்பதாகவும் விமல் வீரவன்ச அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தான் ஜனாதிபதியின் சரீர இயல்பு குறித்துத் தெரிவித்தது அவருக்கு அவதூறு ஏற்படுத்துவதற்கல்ல என்றும், தனது உரையை முழுமையாக விளங்கிக்கொண்டால் இது புரியும் என்றும் வீரவன்ச தெரிவித்தார்.

### கிரனேட் தாக்குதல்

மட்டக்களப்பு சித்தாண்டிப்பகுதியில் - உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகம் மீது நேற்று முன்தினம் அதிகாலை கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் பாரிய சேதங்கள், உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லையென மட்டக்களப்பு அரசியற்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதல் தொடர்பாக மட்டக்களப்பிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## வரவு - செலவுத் திட்டத் தயாரிப்புக்கு அமெரிக்க பேராசிரியரிடம் ஆலோசனை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக அமெரிக்கப் பேராசிரியர் ஒருவரின் ஆலோசனையைப் பெற்றிருப்பதாக, ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இந்த விடயத்தில் ஜே.வி.பியினரின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து அறிந்துகொள்ள மக்கள் ஆவலாய் இருப்பதாகவும் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பந்துல குணவர்த்தன- அமெரிக்கப் பேராசிரியர் ஹாஸ் பவிலிக்கின் நிபுணத்துவ ஆலோசனைப்படி வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

வரலாற்றில் முதற்தடவையாக உலகவங்கியின் ஆலோசனையைப் பெறாது வரவு - செலவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுவதாக ஜே.வி.பியினர் குற்றம்சாட்டியிருந்தனர்.

இவருக்கு நாள் ஒன்றுக்கு 65 ஆயிரம் ரூபா செலவுசெய்து நிதிய மைச்சர் மேற்கொண்டுவரும் நடவடிக்கை தொடர்பாக ஜே.வி.பியினர் அறியவில்லையா என்ற வினா மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது எனத் தெரிவித்தார்.

## கனேடிய தூதரகம் மன்னிப்பு கோரியது

(கொழும்பு)

அண்மையில் அந்திராக்ஸ் கிருமி சம்பந்தமாக கனேடிய தூதரகத்தில் இரு பிக்குகள் மீது நடத்தப்பட்ட பரிசோதனைகளுக்கு மன்னிப்புக் கோருவதாக கனேடிய தூதரகம் தெரிவித்துள்ளது.

இது பற்றித் தூதரகம் கருத்து வெளியிடுகையில் -

இது உள்நோக்கம் எதுவுமில்லாமல் ஏற்பட்ட தவறாகும். பொதுவான பாதுகாப்பு ஏற்பாடுகள் இந்தத் தவறுக்கு காரணமாக இருக்கலாம். குருமார்கள் தாங்களாகவே இதற்கு உடன்பட்டார்கள்.

அத்துடன், அவருக்குத் தனியான உடை மாற்றும் அறை வழங்கப்பட்டது. புதிய உடைகள் வழங்கப்பட்டது என்றும் கூறி தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துள்ளது.

## சமூகக்கல்விப் பாடத்துக்கு பதிலாக 3 தனித்தனி பாடங்கள்

பாடசாலைகளின பாட விதானத்தில் சமூகக்கல்விக்குப் பதிலாக மூன்று தனித்தனியான பாடங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

பூமி சாஸ்திரம், வரலாறு, புவியியல் போன்ற புதிய பாடங்கள் போதிக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பாடங்களின் போதனை அடுத்த ஆண்டு தரம் 7 வகுப்புக்களில் இருந்து ஆரம்பிக்கப்படும்.

இந்தப் பாடங்களை உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்யும் வைபவம் ஹோமாகம - மீகொடவில் உள்ள கல்வி வள நிலையத்தில் இன்று இடம்பெறும்.

## சபாநாயகரைப் பதவி நீக்க 5 அரசியல் கட்சிகள் எதிர்ப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டாரவை பதவிநீக்கம் செய்வதற்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஐந்து அரசியற்க்ட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

சபாநாயருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாப் பிரேரணயையைக் கொண்டுவந்து, அவரை சபாநாயகர் பதவியிலிருந்து நீக்கப்போவதாகக் கடந்த வாரம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் தெரிவித்தனர்.

எனினும் ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய அரசியற் கட்சிகள் சபாநாயகருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்படவுள்ள நம்பிக்கை இல்லாப் பிரேணைக்கு எதிராக வாக்களிப்பது எனத் தீர்மானித்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக செய்தி ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த சபாநாயகர் -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடு ஒரு தலைப்பட்சமானது என்றும், தான் தனது மனச்சாட்சியின்படி தனது கடைமைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக கருதத்துத் தெரிவித்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் - சபாநாயகர் தெரிவின்போது லொக்குபண்டாரவுக்கு ஆதரவாக வாக்களித்துவிட்டு தற்பொழுது அவருக்கு எதிராக வாக்களிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

சபாநாயகர் மீது தாம் எந்தக் குற்றங்களையும் கண்டுபிடிக்கவில்லை என்றும், அதனால் அவருக்கு எதிராக வாக்களிக்கப்போவதில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

## கிரனேட் லோஞ்சர் படையினரால் மீட்பு

(கொழும்பு)

அம்பாறை - சாகாமத்தில் ரோந்துசென்ற விசேட அதிரடிப் படையினரால் அதிசக்தி வாய்ந்த தொலைத்தொடர்பு சாதனமும், கிரனேட் லோஞ்சர் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகப் பாதுகாப்பு நடவடிக்கைச் செயலகம் அறிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு 11 மணியளவில் காஞ்சன குடா- சாகாமம் விதியில் ரோந்துசென்ற அதிரடிப்படையினர் சந்தேகத்துக்கிடமான மோட்டார் சைக்கிள் ஒன்றை மறித்தனர்.

இதன்போது அதில் பயணம் செய்தவர்கள் காட்டுக்குள் தப்பியோடி விட்டனர். இதன்பின்னர் உயர்வலுத் தொலைத்தொடர்பு சாதனம், கிரனேட் லோஞ்சரும் அந்தப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டன.

## கொப்பேகடுவவின் சிலையை புலிகள் உடைக்கவுள்ளதான செய்தியில் உண்மையில்லை!

### வவுனியா அரசியந்துறை தெரிவிப்பு

வவுனியா நகரிலுள்ள ஜெனரல் கொப்பேகடுவவின் சிலையைத் தகர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாராகவுள்ளதாக வெளியான செய்தியில். எதுவித உண்மையும் இல்லையென விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறையினர் தெரிவித்துள்ளனர்.

ஞாயிறு வார இதழான 'லக்பிம' பத்திரிகையில் வெளிவந்த இவ்வாறான செய்தியை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.

இதனையடுத்து, நேற்றுமுன்தினம் தொடக்கம் கொப்பேகடுவவின் சிலைக்கு இராணுவத்தினரும், பொலிஸாரும் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

இறந்த ஒரு மனிதனின் உருவச்சிலையை உடைக்கும் அளவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மோசமானவர்கள் இல்லையென்றும், சமாதானத்துக்கு எதிரானவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இவ்வாறு அவதூறான செய்திகளைச் சுமத்தி வருவதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

## புதிய அமைச்சர்கள் மூவருக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி அரசின் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட ரிசாத் பதியுதீன், அமீர் அலி, அப்துல் மஜீத் ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானித்திருப்பதாக, முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கசன் அலி அறிவித்துள்ளார்.

புதிதாக அமைச்சர்களாகப் பதவியேற்ற இந்த மூவரும் கட்சிக்கு விரோதமாக செயற்பட்டுக்கொண்டிருப்பது கட்சிக்கு முன்பே தெரிந்திருந்தது.

அரசோடு இணைந்துகொண்டு முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராக எடுத்துவந்த சூழ்ச்சியின் பிரதிபலன் இந்தப் பதவிப் பிரமாணத்தினூடாக நாட்டு மக்களுக்குத் தெரியவந்துள்ளது. (தே)



பட்டதாரிகளுக்கான பயிற்சித் திட்டத்தில் பொல்கொல்ல பயிற்சி நிலையத்தில் பயிற்சிக்காக குழந்தைகளுடன் வந்திருக்கும் சிங்கள, முஸ்லிம், தமிழ் யுவதிகளைப் படத்தில் காணலாம்.

## பிரதியமைச்சர் தலைமையிலான குழு மூன்று இரவு விடுதிகள் மீது தாக்குதல்!

### பொருட்களையும் கொள்ளையடித்தது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பிரதியமைச்சர் மேவின் சில்வா தலைமையிலான 100 பேர் கொண்ட ஆயுதக் கும்பலொன்று கொழும்பு - கறுவாத்தோட்டத்திலுள்ள இரவு விடுதிகள் மூன்றில் கதவுகளை உடைத்து உட்புகுந்து பொருட்களை அழித்து பாரிய நஷ்டங்களை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு பிரதியமைச்சர் மேவின்சில்வா தலைமையிலான 100 பேர் கொண்ட ஆயுதக் கும்பல் இந்த விடுதிகளில் பாரிய அழிவுகளை மேற்கொண்டதுடன், அங்கிருந்த மதுபான வகைகளையும் கையடக்கத் தொலை பேசிகளையும் கொள்ளையடித்து சென்றுள்ளதாக கறுவாத்தோட்ட பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கறுவாத்தோட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

கறுவாத்தோட்ட சிங்கள விளையாட்டு சங்க கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள பிரான்சிஸ் கிளப் சுப்றாணோ கெறொப் கிளப் மற்றும் வின்சானா கிளப் ஆகிய இரவு விடுதிகளும் தாக்குதலுக்குள்ளாகின.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுப்றானோ கெரொப் இரவு விடுதியின் முகாமையாளர் ரஜீவ் மத்யூ- ஆயுதக் கும்பலில் பிரதியமைச்சர் மேவின் சில்வா இருந்ததாக கறுவாத்தோட்ட பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் நடைபெறுவதற்கு முதல் நாள் அதிகாலை 1.30 மணியளவில் பிரதியமைச்சரின் மகன் தனது தந்தையின் தொடர்பு அதிகாரிகளான மூன்று பெண்களுடனும் மற்றும் 10 பேருடனும் பிரான்சிஸ் இரவு விடுதிக்குள் ஆயுதங்களுடன் செல்ல முயன்ற வேளை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாகவே இந்தச் சம்பவம் ஏற்பட்டிருக்கலாமென சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

முதல்நாள் அதிகாலை இடம்பெற்ற சம்பவத்தின்போது பிரதியமைச்சரின் மகன் பாதுகாப்பு அதிகாரியின் தலையில் பிஸ்டலை வைத்து கொல்லப்போவதாக சொன்ன குற்றச்சாட்டுக்கும் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

# கராச்சி டெஸ்ட் போட்டியில்

# பாகிஸ்தான் அணி வெற்றி!



இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் சமநிலையில் முடிவுற்றது.

கராச்சியில் நடைபெற்றுவந்த டெஸ்ட் போட்டியின் ஐந்தாவது நாளான நேற்று 7 விக்கெட் இழப்புக்கு 361 ஓட்டங்கள் பெற்ற நிலையில் இருந்து இலங்கை அணி ஆட்டத்தை ஆரம்பித்தது.

2 ஓட்டங்களுடன் நின்ற சமிந்த வாஸுடன் ம:.ரூப் இணைந்து கொண்டார். ஆயினும் அவரால் நீண்ட நேரம் நிலைத்து நிற்க முடியவில்லை. 15 பந்துகளில் 3 ஓட்டங்கள் மட்டுமே பெற்றிருந்த ம:.ரூப், கனேரியாவால் வீழ்த்தப்பட்டார்.

இதையடுத்து, ரங்கன ஹேரத்-சமிந்த வாஸுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் நீண்டநேரம் நிலைத்து நின்று ஆடினர். சமிந்த வாஸும் ஹேரத்தும் எப்படியாவது நேரத்தைப் போக்கி ஆட்டத்தைச் சமநிலையில் முடிப்பதற்கு பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், அணி 387 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் - ரங்கன ஹேரத் ஆட்டமிழந்து சென்றார். 42 பந்துகளை எதிர்கொண்டு 6 ஓட்டங்களை மட்டுமே பெற்ற இவர் - நவீட் உல் ஹசனின் பந்து வீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் டில்ஹார பெர்னாண்டோ களமிறங்கினார். இவரும் சமிந்த வாஸுக்கு இணையாக நின்று பந்துகளை சமாளிப்பதிலேயே குறியாக இருந்தார்.

கணிசமான நேரம் இந்த ஜோடி நின்று ஆடிய போதிலும் 406 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றிருந்தபோது - கடைசி விக்கெட்டும் வீழ்ந்தது. டில்ஹார பெர்னாண்டோ 40 பந்துகளில் 4 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்த நிலையில் நவீட் உல் ஹசனின் பந்துவீச்சில் கம்ரன் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

சமிந்தவாஸ் 114 பந்துகளை எதிர்கொண்டு 5 பவுண்டரிகளுடன் 32 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்து வீச்சில் டனிஸ் கனேரியா 60 ஓவர்கள் பந்துவீசி 118 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட் டுக்களைக் கைப்பற்றினார். நவீட் உல் ஹசன 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதையடுத்து 137 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி ஆட்டத்தை ஆரம்பித்தது.

பாகிஸ்தான் அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் வேகமாக ஓட்டங்களைக் குவித்து, விரைவாக வெற்றி இலக்கைப் பெற்றுவிடவேண்டும் என்ற நிலையில் ஆடினார்கள்.

இதனால் பாகிஸ்தான் அணியின் ஓட்ட எண்ணிக்கை 31 ஆக இருந்தபோது இம்ரான் பர்கத் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 22 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களைப் பெற்றிருந்த இவரை சமிந்தவாஸ் ஆட்டமிழக்கச் செய்தார்.

இதையடுத்து, யுனுஸ் கான் களமிறங்கினார். எனினும் யாசிர் ஹமீட் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர் 33 பந்துகளில் 1 பவுண்டரியுடன் இந்த ஓட்டங்களைப் பெற்றார்.

இவரது விக்கெட்டை ரங்கன ஹேரத் கைப்பற்றினார். அடுத்தடுத்து பாகிஸ்தான் அணியின் விக்கெட்டுக்கள் வீழ்ந்த நிலையில், யூசுப் யுகானா களமிறங்கினாலும் அவரால் ஒரே ஒரு ஓட்டத்தை மட்டுமே பெறமுடிந்தது.

அவரை எல்.பி.டபிள்யூ முறையில் ஹேரத் வீழ்த்தினார்.

இதையடுத்து சொகைப் மலிக் களமிறங்கினார். அவர் நிதானமாக அடித்து ஆடிக்கொண்டிருந்தபோது யுனுஸ்கானின் விக்கெட் வீழ்த்தபட்டது. சமிந்தவாஸ் அவரை வீழ்த்தினார். 31 பந்துகளில் 1 பவுண்டரியுடன் 14 ஓட்டங்களைப் பெற்றார்.

நான்கு விக்கெட்டுக்கள் 57 ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்ட நிலையில் - பாகிஸ்தான் அணியை மடக்கிவிடலாம் என்று இலங்கை அணி கருதி பந்துவீச முற்பட்டது.

ஆயினும் சொகைப் மலிக்கும் அப்துல் ரசாக்கும் இணைந்து அபாரமாக ஆடி பாகிஸ்தான் அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச்சென்றனர்.

37 ஆவது ஓவரில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம், பாகிஸ்தான் 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.



சொகைப் மலிக் 60 பந்துகளில் 1 சிக்சர், 6 பவுண்டரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களையும், ரசாக் 71 பந்துகளில் 1 சிக்சர், 2 பவுண்டரிகளுடன் 35 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த வெற்றி மூலம் இந்த டெஸ்ட் தொடர் 1:1 என்ற நிலையில் சமநிலையில் முடிந்தது.

# அடுத்த ஆண்டு உலக செஸ்போட்டி இந்தியாவில்

உலக அணிகள் செஸ் சாம்பியன் போட்டி இந்தியாவில் அடுத்த ஆண்டு செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறும் என்று இந்திய செஸ் பெடரேஷன் செயலாளர் உமர்கோயா தெரிவித்தார். போட்டி நடைபெறும் இடம் மற்றும் திகதி பின்னர் முடிவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

ஸ்பெயினில் சமீபத்தில் நடந்த செஸ் ஒலிம்பியாட் போட்டியில் முதல் 8 இடங்களைப் பிடித்த அணிகள் இந்த உலக போட்டிக்குத் தகுதிபெறும்.

# பங்களாதேஷ் கப்டனாக பஸார்!



நியூஸிலாந்து கிரிக்கெட் அணி பங்களாதேஷில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. டெஸ்ட் தொடரை நியூஸிலாந்து 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ஒருநாள் தொடர் இன்று தொடங்கவுள்ளது. இத்தொடருக்கான பங்களாதேஷ் கப்டனாக ஹபிபுல் பஸார் நியமிக்கப்பட்டுள்ளார். காயம் காரணமாக டெஸ்ட் தொடரில் அவர் ஆடவில்லை. இதேபோல், நியூஸிலாந்து அணிக்கு விக்ரோறி கப்டனாக உள்ளார். பிளமிங் நாடு திரும்பியுள்ள தால் அவருக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஒரு நாள் தொடருக்கான பங்களாதேஷ் அணி வருமாறு-

ஹபிபுல் பஸார் (கப்டன்), காலித் மசூத், ரஜினி, ஜாவித் உமர், காலித் மெ:.மூத், முகமது அஸ்ரப், மஞ்சரல் இஸ்லாம், பைசியா, ரகுமான், முகமது ரபீக், நபிஷ் இக்பால், அட்டாப் அகமது, நஜ்மல் உசேன்.

# அடுத்த டெஸ்ட்டிலிருந்து கங்கூலி விலகினார்!



அவுஸ்ரேலியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டி நாளை மும்பையில் நடைபெறவுள்ளது. இந்தப்போட்டியில் இருந்து இந்திய கப்டன் கங்கூலி விலகினார். காயம் காரணமாக அவதிப்பட்டுவந்த கங்கூலிக்கு நேற்று உடற்தகுதிப் பரிசோதனை நடத்தப்படுவதாக இருந்தது.

இதற்கிடையே நிருபர்களிடம் பேட்டி அளித்த கங்கூலி, என்னால் சிறிது தூரம்கூட ஓடமுடியவில்லை. எனவே, கடைசி டெஸ்ட் போட்டியில் இருந்து விலகி இருக்கிறேன் என்றார். இவருக்குப்பதிலாக அணியில் கூடுதலாக ஒரு பந்துவீச்சாளர் சேர்க்கப்பட வாய்ப்பு உள்ளது.

இதேவேளை, இந்த டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் களம் இறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கைவிரலில் ஏற்பட்ட காயம் காரணமாக இவர் முந்தைய 3 போட்டிகளிலும் ஆடவில்லை. இவருக்குப்பதிலாக அணியில் சேர்க்கப்பட்ட ஹடிச் சிறப்பாக ஓட்டங்கள் குவித்து வருகிறார்.

எனவே, யாருக்குப் பதிலாக ரிக்கி பொண்டிங் அணியில் இடம் பிடிப்பார் என்ற குழப்பம் அதிகரித்துள்ளது. இந்தியாவுடன் டெஸ்ட் வாழ்க்கையைத் தொடங்கிய கிளார்க்கும் ஓட்டங்கள் குவிக்கும் பணியைச் சிறப்பாகச் செய்துள்ளார்.

தொடரை வென்றுவிட்டதால் ஒரு சிலருக்கு ஓய்வு கொடுக்கப்படவும் வாய்ப்புள்ளதாக தெரிகிறது. எந்த ஆட்டத்திலும் ஆடாத பிரெட் லீக்கும் கடைசி ஆட்டத்தில் வாய்ப்பு கிடைக்கலாம் என கூறப்படுகிறது.

# மும்பை டெஸ்ட்டிலும் அவுஸ்ரேலியா வெல்லும்

## கில்கிறிஸ்ட் தெரிவிப்பு



இந்தியாவுக்கு எதிரான மும்பை டெஸ்ட் போட்டியிலும் வெற்றி பெற்று அவுஸ்ரேலிய அணியின் பலத்தை நிரூபிப்போம் என்று அவுஸ்ரேலிய அணியின் தற்காலிகத் தலைவர் அடம் கில்கிறிஸ்ட் தெரிவித்தார்.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் இடையேயான 4 டெஸ்ட் போட்டித் தொடரில், 3 ஆட்டங்கள் முடிவில் அவுஸ்ரேலியா 2:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய அணி கப்டன் கில்கிறிஸ்ட் மும்பையில் செய்தியாளர்களிடம் கூறுகையில் -

35 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய மண்ணில் அவுஸ்ரேலிய அணி டெஸ்ட் தொடரை வென்றுள்ளது மிகவும் சிறப்பானதாகும். மும்பை டெஸ்டிலும் வென்று எங்கள் பலத்தை நிரூபிக்க ஆசைப்படுகிறேன்.

நாக்பூர் டெஸ்ட் போட்டியில் ஆடுகளத்தைப் பார்த்ததும் இந்திய அணியினர் மனோரீதியான பலத்தை இழந்து விட்டார்கள் என்று எண்ணுகிறேன். 3 வேகப்பந்து வீச்சாளர்களுடன் இந்தியா ஆடி இருந்தால், நாக்பூர் டெஸ்ட் முடிவு மாறி இருக்கலாம்.

சென்னை டெஸ்டில் தொடரை சமன்செய்ய இந்திய அணிக்கு வாய்ப்பு இருந்தது. எங்கள் நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர்கள் அதைத் தங்கள் பக்கம் திருப்பி விட்டனர்.

அவுஸ்ரேலிய அணியின் எல்லா வீரர்களும் சிறப்பான பங்களிப்பை அளித்தனர். கப்டன் பொறுப்பில் எனக்கு நெருக்கடி எதுவும் இல்லை என்று கில்கிறிஸ்ட் கூறினார்.




# இந்திய அணியின் தோல்விக்கு மோசமான திட்டமிடலே காரணம்!

## கிரிக்கெட் சபை மீது கவாஸ்கர் பாய்ச்சல்

(சிட்னி)

மோசமான திட்டமிடுதலால் இந்தியா தோல்வி அடைந்துள்ளதாக இந்திய கிரிக்கெட் சபை மீது கவாஸ்கர் பாய்ந்துள்ளார்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா 0:2 என்ற புள்ளி அடிப்படையில் கோட்டைவிட்டது. கடந்த 1969 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாக சொந்த மண்ணில் இந்திய அணி டெஸ்ட் தொடரை அவுஸ்ரேலியாவிடம் பறி கொடுத்துள்ளது. ஜீரணிக்கமுடியாத இந்தத் தோல்விக்கு இந்திய கிரிக்கெட் சபைதான் முக்கிய காரணம் என்று முன்னாள் கப்டன் கவாஸ்கர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில்,-

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் மோதல்களை இந்திய கிரிக்கெட் சபை சரியான முறைப்படி திட்டமிடவில்லை. பெங்களூர் ஆடு களத்தில் அவுஸ்ரேலியா 3 முறை வெற்றிபெற்றுள்ளது. இது நன்றாகத் தெரிந்தும் அவுஸ்ரேலிய அணிக்கு நம்பிக்கை வரும் வகையில் பெங்களூரில் முதல் டெஸ்ட் போட்டி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக சென்னையில் முதல் டெஸ்ட் போட்டி நடத்தப்பட்டிருக்கவேண்டும். சென்னை ஆடுகளம் இந்திய அணிக்கு எப்போதுமே ராசியான மைதானம்.

அவுஸ்ரேலியா, பாகிஸ்தான் மற்றும் ஐரோப்பிய சுற்றுப்பயணம் உட்பட இந்த ஆண்டில் மட்டும் இந்தியா 28 ஒருநாள் போட்டிகளில் மோதியுள்ளது. டெஸ்ட் போட்டியை கணக்கில் எடுத்துக் கொண்டால் இந்தியா 6 மோதல்களில்தான் ஆடியுள்ளது. இதுவும் இந்தியாவின் தோல்விக்கு ஒரு காரணம்.

அதிகமான ஒருநாள் போட்டிகளில் ஆடிய காரணத்தால் இந்திய வீரர்களின் மனதில் இன்னும் ஒருநாள் போட்டி பற்றிய எண்ணம் நீங்கவில்லை. மனநிலையை முதலில் மாற்றினால்தான் எஞ்சிய மோதலில் இந்திய அணியிடம் இருந்து சிறப்பான முடிவை எதிர்பார்க்க முடியும்.

நாக்பூர் ஆடுகளம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு கைகொடுக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியாவில் இருப்பதைப் போன்ற ஆடுகளம் நாக்பூரில் ஏற்படுத்தப்பட்டது. இதுபோன்ற ஆடுகளங்களில் இந்திய வீரர்கள் எந்த அளவுக்கு சோதனையை எதிர்கொள்வார்கள் என்பது நன்றாகத் தெரிந்தும், கிரிக்கெட் சபை எப்படி அனுமதி கொடுத்தது என்று தெரியவில்லை.

முன்னாள் இந்திய வீரரான கீர்த்தி அசாத்தும் இந்திய கிரிக்கெட் சபையைச் சாடியுள்ளார். மோசமாக ஆடுகிறார் என்று தெரிந்தும் விக்கெட் காப்பாளர் பார்த்திவ் பட்டேலை தொடர்ந்து அணியில் தேர்வு செய்தது மிகப் பெரிய தவறு என்று அவர் கூறினார்.

# திருத்தப்படாத வெள்ள வாய்க்காலால் குடியிருப்புகள் பாதிக்கும் அபாயம்!

(வடமராட்சி)

நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையிலுள்ள மந்திகை ஆலடிச் சந்தைக்கு முன்னாலிருந்து பருத்தித்துறை - சாவகச்சேரி பிரதான வீதி வழியாக ஓடும் வெள்ள வாய்க்காலால் இந்தப் பகுதி மக்களின் குடியிருப்புகளுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இந்த வெள்ள வாய்க்கால்- பருத்தித்துறை, மந்திகை பிரதான வீதி வழியாக ஓடும் வெள்ளம் ஒன்று சேர்ந்து, மாவில் வயலைச் சென்றடையும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கிற பொழுதிலும், கடந்த 25 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாது, கவனிப்பாரற்று இருக்கிறது.

இதனால் பற்றைகள் வளர்ந்து, வாய்க்கால் தூர்ந்து, வெள்ளம் பாய முடியாமலுள்ளது. இதனால் பிரதான வீதி வெள்ளம் -வீதிகளில் மேவிப் பாய்வதால், போக்குவரத்துக்கு பெரும் இடையூறாகக் காணப்படுகிறது.

அத்துடன் வெள்ள வாய்க்காலுக்கு அருகிலுள்ள தோட்டங்கள், வீடுகளுக்குள் வெள்ளம் பாய்கிறது. இதனால், இந்தப் பகுதிகளிலுள்ள குடியிருப்பு மக்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனைவிட இந்த வெள்ள வாய்க்காலுக்கு அண்மையில் பிரதான வீதியிலிருந்து வாய்க்காலுக்குச் சமாந்தரமாகச் செல்லும் சிறு வீதியால், முழு வெள்ளமும் பாய்கிறது. இதனால் இந்த வீதி- போக்குவரத்துக்கு மக்களால் பயன்படுத்த முடியாமலுள்ளது.

தற்போது மழை பெய்வதால், இந்தச் சிறு வீதியாலேயே சில அடி உயரத்துக்கு வெள்ளம் பாய்கிறது.

அத்துடன், வீடுகளுக்குள்ளும் செல்கிறது. தேங்கியும் நிற்கிறது.

எனவே, உடனடியாகப் பிரதான வீதியிலிருந்து ஓடிச்சென்று, மாவில் வயலைச் சென்றடையக்கூடிய வெள்ள வாய்க்காலைப் புனரமைக்க வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களுக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

# திருத்தப்படாத துறைமுக வீதியூடாக போக்குவரத்துச் செய்வதில் சிரமம்



(நெடுந்தீவு)

ஊர்காவற்துறை கண்ணகை அம்மன் கோயில் துறைமுகம் வரையான வீதி -மிகவும் படுமோசமான முறையில் சேதமடைந்துள்ளதால், அதனூடாக வாகனங்களிலும், நடந்தும் செல்லும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஊர்காவற்துறை செபஸ்ரியன் கோயில் சந்தியிலிருந்து கண்ணகை அம்மன் கோயில் துறைமுகம் வரையான வீதியே குன்றும் குழியுமாக இருந்து, பெரும் விபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய நிலையில், கவனிப்பாரற்றுக் கிடக்கிறது.

இந்தப் பாதையூடாகவே எழுவை தீவு, அனலைதீவு போன்ற தீவுகளுக்கு நாளாந்தம் பயணிக்கும் மக்கள் - பெரும் சிரமப்பட்டுச் சென்று வருகின்றனர்.

இதனூடாகச் சென்று கண்ணகை அம்மன் துறைமுகம் ஊடாகவே தங்கள் பயணங்களைத் தொடர்கின்றனர். இதேவேளை, கண்ணகை அம்மன் கோவில் பாலம் ஏனைய தீவுப் பகுதிகளிலுள்ள பாலங்களை விட, உறுதியாகவும், சீராகவும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# வாசிப்பு பழக்கம் அதிகமுள்ளவர்கள் வாழ்க்கையில் முழுமைபெறுகின்றனர்

## மூத்த எழுத்தாளர் சிற்பி தெரிவிப்பு

சிறுவயதிலிருந்தே பலவகை நூல்களை வாசிக்கும் பழக்கம் கொண்டவர்கள் - வளர்ந்தவர்களானதும் மேதைகளாகவும், கவிஞர்களாகவும், பேச்சாளர்களாகவும், பிரசங்கிகளாகவும் திகழ்கின்றனர்.

ஓவியம் வரைதல், கட்டுரை எழுதுதல், கதை எழுதுதல் என்பன சிலருக்கு கைவந்த கலை போல, நூல்களை வாசிப்பதும் ஒரு கலையே. ஒருவர் தனது அனுபவத்தை அல்லது தான் அறிந்து தெரிந்த விடயங்களை நூல் வடிவில் வெளியிடுகிறார்.

இதனை ஏனையோர் படிக்கும் போது, பல விடயங்களை இலகுவாக அறிய முடிகிறது. வாசிப்பதால் மனிதன் பூரணமானவனாக மாறுகிறான்.

இவ்வாறு தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, 'வலி.தெற்கு பிரதேசசபையின் சுன்னாகம் பொது நூலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மாணவர்களுக்கான வாசிப்பின் முக்கியத்துவம் என்னும் பொருளில் உரை நிகழ்த்திய மூத்த எழுத்தாளர் சிவசரவணபவன் (சிற்பி) தெரி வித்தார்.

பிரதேசசபை செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிற்பி தொடர்ந்து உரையாற்றுகையில் -

கண்டதும் கற்கப் பண்டிதனாவான் என்பதற்கு இணங்க, மாணவர்கள் சிறு வயது முதல் வாசிக்கும் பழக்கத்தை பழகிக்கொள்ளவேண்டும்.

பரீட்சைகளில் சித்திபெற வாசிப்பு மிகவும் அவசியமாகும். புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறவேண்டுமானால், கட்டாயம் நூல்கள் வாசிப்பது அவசியம் எனக் குறிப்பிட்டார்.(101)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வு

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கடமைபுரியும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் 5 ஆம் திகதி வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வுக் கழக தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (122)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : மெர்லின்
முகவரி : நல்லூர்.

### இரண்டாவது அகவையில்



பெயர் : ஜெ.ஜெயப்பிரகாஸ்
முகவரி : பருத்தித்துறை.

### நான்காவது அகவையில்



பெயர் : ஜெ.தனுசன்
முகவரி : கிளிநொச்சி.

### வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------------------------

முகவரி : ----------------------------

பிறந்த ஆண்டு: ----------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

............................

பெற்றோர் ஒப்பம்

# பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு விவசாய சம்மேளனப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும், அண்மையில் புத்தூர் கிழக்கு குமர குருபரன் சனசமூக நிலைய மண்டபத்தில், புத்தூர் கமநல சேவை கேந்திரஸ்தான பெரும்பாக உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகசபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் - செ.பத்மநாதன், உப தலைவர் - நா.கார்த்திகேசு, செயலாளர் - செ.காசிநாதன், உபசெயலாளர் - சி.இராஸ்மோகன், பொருளாளர் - க.மயில்வாகனம், போஷகர் - கிராம அலுவலர் க.வைத்தியநாதன் மற்றும் நான்கு நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (110)



சர்வதேச முதியோர்தினம் தொடர்பான கெல்ப்ஏஜ் அமைப்பு நடத்திய தேசிய மட்ட கட்டுரைப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ். நாவற்குழி மகா வித்தியாலய மாணவி செல்வி வி.லவப்பிரியா டொக்டர் ஆதர் சி கிளார்க்கிடமிருந்து பரிசில் பெறுகின்றார்.

# ஏழு கடற்தொழிலாளர்கள் கடற்பரப்பில் தாக்கப்பட்டனர்

மயிலிட்டி கடற்பரப்பில் வைத்து ஏழு கடற்தொழிலாளர்கள் நேற்று முன்தினம் அதிகாலை கடற்படையினரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையின் தாக்குதலுக்குள்ளான 7 கடற் தொழிலாளர்களில் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த ஆ.அன்பழகன் (வயது 27), கோ.ஜெகதீஸ்வரன் (வயது 30), சுமன் (வயது 22) ஆகிய மூவரும் கடுங்காயங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

வழமைபோல மயிலிட்டி கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதே, வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த இந்த ஏழு கடற் தொழிலாளர்களும் கடற்படையால் வழிமறித்துத்தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய பரிசளிப்பு விழாவும், பெற்றோர் தின விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சட்டத்தரணி க.நடேசனும் அவரது பாரியாரும் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

# போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் வட்டுக்கோட்டை தட்டாதெரு ஒழுங்கை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெற்கிலுள்ள தட்டாதெரு ஒழுங்கை - போக்குவரத்துச் செய்யமுடியாதபடி, குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

தற்போது மாரிகாலமாகையால், அந்தக் குன்றுகுழிகளுள் வெள்ளம் தேங்கி நின்று, சிறு குளங்கள் போன்று காட்சி தருகிறது.

சில கிலோ மீற்றர்கள் நீளமான, பல கிளைகளைக் கொண்ட இந்த ஒழுங்கையில், பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வசித்து வருகின்றன.

அத்துடன், பிரபல கல்லூரியான வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குப் பெருந்தொகையான மாணவர்கள் இந்தப் பிரதான ஒழுங்கையூடாகவே சென்று வருகின்றனர்.

இதனால் பெருமளவு மாணவர்களும் இந்த வீதியின் நிலையால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு, இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (207)



தொழிற்துறைத் திணைக்களத்தால் நடமாடும் மட்கலப் பயிற்சிநெறியை வலி.மேற்கு பிரதேச செயலர் ய.பரந்தாமன் பண்ணாகத்தில் ஆரம்பித்து, மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.




# புதிய நீரிழிவுநோய்க் கருவி




தொல்லைதருகின்ற நீரிழிவு நோய்க்கு மிகவும் சிறந்த ஒரு மருத்துவக் கருவி தற்போது கண்டறியப்பட்டிருக்கிறது. இந்தக் கருவி ஒக்ஸ்போட் பல்கலைக்கழக மருத்துவ ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. உலகளாவியரீதியில் 170 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் நீரிழிவு நோயால் தற்போது அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய குளுக்கோஸின் செறிவு நிமிடத்துக்கு நிமிடம் மாறிக் கொண்டிருக்கிறது. அதிலும் 2030 ஆம் ஆண்டளவில் இந்த எண்ணிக்கை இரு மடங்காகக் கூடும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது நீரிழிவு நோய்க்குரிய சிறந்த மருந்தாக இன்சுலினே காணப்படுகிறது. ஆனாலும், சிலவேளைகளில் இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு தெரியாமல், இன்சுலின் ஏற்றப்படுவதால், கோமா நிலைக்கு நோயாளி செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. தற்போது கண்டறியப்பட்டிருக்கின்ற கருவி ஒரு மொபைல் கருவியாகும். இது எப்பொழுதும் நோயாளியின் சட்டைப் பைக்குள் இருந்து கொண்டே இருக்கும். அவர் தன்னுடைய உடல்நிலையைப் பொறுத்துத் தானாகவே தன்னுடைய குருதியிலுள்ள குளுக்கோஸின் செறிவை அறிந்துகொள்ள முடியும்.

கென்ய நாட்டின் - நைரோபி நகரில் எடுக்கப்பட்ட ஆய்வுகளின்படி, நீரிழிவுநோய்க்கும் ரீபி நோய்க்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது. இதன்காரண மாக ரீபி நோயாளர்கள் நீரிழிவு நோயாலும் தற்போது பாதிக்கப் பட்டுக்கொண்டு வருகிறார்கள்.

# அதிகம் கற்கும் கறுப்பினத்தவர்கள்



பிரித்தானியாவில் காணப்படுகின்ற விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் கூடுதலாக வெள்ளைக் காரர்களாகவே இருக்கிறார்கள். ஆனால், தற்பொழுது இத்தகைய துறைகளில் கறுப்பு இனத்தவரும் தம்முடைய செல்வாக்கைச் செலுத்தத் தொடங்கியுள்ளனர். இதே போல தென்னாபிரிக்க நாடுகளிலும் வைத்திய மற்றும் பொறியியல் துறைகளில் கறுப்பு இனத்தவரின் செல் வாக்கு கணிசமானவையாக அதிகரித்துள்ளது. அபி விருத்தியடைந்துவரும் நாடுகளில் கூடுதலாகக் கறுப்பின மக்களே விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பத்து றைகளில் மிகுந்த செல்வாக்குக் கொண்டவர்களாகவே காணப் படுகின்றனர். பிரித்தானியாவில் தற்போது கறுப்பின மற்றும் வெள்ளை இனத்தவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து கல்வி கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் போக்கில் போனால், 2050 ஆம் ஆண்டள வில் கூடுதலான கறுப்பின மக்கள் கல்வி கற்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும் எனத் தெரிகிறது. அண்மையில் எடுக்கப் பட்ட கருத்துக் கணிப்பின்படி, 200 மாணவர்களில் - கூடுதலான வைத்தியர்களும், விஞ்ஞானிகளும் கறுப்பின மானவர்களாகத் தான் இருக்கிறார்கள். இது அதிகரித்து வருகின்ற கறுப்பின மக்களின் படிப்பறிவு வீதத்தைத்தான் காட்டுகிறது என, மேல் நாட்டு வெள்ளைக்கார வர்க்கத்தினர் ஐயம் கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

# இயந்திரமயமாகும் உலகம்



இயந்திர மனிதர்களுடைய செயற்பாடுகள் தற்போது அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன. வீடுகளில் காணப்படுகின்ற எல்லா வகையான வேலைகளையும் தற்போது ஐரோப்பிய நாடுகளில், இயந்திர மனிதர்களாலேயே செய்யப்படுகிறது. அதனைவிட வீட்டிலுள்ள செல்லப்பிராணிகளும் இயந்திரத்தனமாக உருவாக்கப்பட்டிருக்கின்றன.

2003 ஆம் ஆண்டளவில் இயந்திர மனிதனுடைய பாவனை அதிகரிக்கத் தொடங்கியிருந்தது. அத்துடன் மனிதர்களுடைய எல்லா வேலைகளையும் இயந்திர மனிதர்களே செய்யக்கூடிய வாய்ப்பு உருவாகியுள்ளது. தொழில் நுட்பவியலாளர்களின் கருத்துக்கணிப்பின்படி 2007 ஆம் ஆண்டளவில் மிகக் கூடியளவு இயந்திர மனிதர்கள் கண்டுபிடிக்கப்படலாம் எனக் கருதப்படுகிறது. உலகளாவிய இலத்திரனியல் உற்பத்தி நிறுவனங்களில் சொனி நிறுவனம் இயந்திர மனிதர்களை உற்பத்தி செய்வதில் முன்நிற்கிறது. அண்மையில் அதனால் கண்டுபிடிக்கப்பட்ட அற்புதமான வீட்டுச் செல்லப்பிராணிகள், இலத்திரனியல் தொழில் நுட்பத்திறன் கூடியதாகவும் காணப்படுகிறது. அதனை விடக் கிரிக்கட் மற்றும் உதைபந்தாடுகின்ற இயந்திர மனிதர்களும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய விளையாட்டுத்திறன் உண்மையாக விளையாடுகின்ற விளையாட்டு வீரர்களுக்கு ஒரு உந்துசக்தியாக இருக்கும் எனவும் கருதப்படுகிறது.

# எலித்தொல்லை



மெக்ஸிகோ நாட்டில் எலிகள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. அங்கே எடுக்கப்பட்ட தகவல்களின்படி ஏறக் குறைய 250 ஆயிரம் எலிகள் தற்போது வாழுகின்றன. அதிலும் சில எலிகள் பூனைகள் அளவுக்கு வளர்ந்திருக் கின்றன எனக் கூறப்படுகிறது. ஒரு கிராமத்தில் மட்டும் எலிகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதற்காக நூற்றுக்கணக்கான பூனைகளை அனுப்பவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் பிளேக் நோயும் பரவத்தொடங்கியுள்ளது. இதேவேளை ஏறக்குறைய 50 பூனைகள் வரை எலிகளால் தாக்கப்பட்டு, மரணமடைந்திருப்பதாகவும் தெரிகிறது. பூனைகளால் கட்டுப் படுத்தமுடியாத அளவுக்கு எலித்தொல்லை பெருகியுள்ள இடங்களில் விசேட வகையான நஞ்சுப் பதார்த்தம் வரவழைக்கப்பட்டு, எலிகளுக்கு வழுங்கப்படவுள்ளது. மெக்ஸிகோ நாட்டின் சுகாதார அமைச்சு இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுத்து, எலிகள் முழுவதையும் கூண்டோடு ஒழிக்கத் தன்னாலான முழு நடவடிக்கையையும் எடுத்து வருகிறது. இதற்கிடையில் ஆகக்குறைந்தது 800 வீடுகள் வரையில் 2 மாதங்களுக்கு முன்பு எலிகளை ஒழிக்கும் முயற்சிக்காக எடுக்கப்பட்டன. தற்போது அழிக்கப்பட வேண்டிய எலிகள் கொண்ட வீடுகள் - பல்கிப் பெருகியுள்ளன.

# ஒப்ரேசன் நேரடி ஒளிபரப்பு

சத்திர சிகிச்சை கூடத்துக்குள் நுழைவதற்கு பயப்பட்ட காலம்போய், இப்பொழுது நேரடியாக எல்லாச் சத்திர சிகிச்சையையும் பார்க்கக்கூடிய வசதி வந்துள்ளது. அமெரிக்காவில் நடக்கின்ற மிகப் பெரிய சத்திர சிகிச்சையை, லண்டனில் இருக்கின்ற மிகப்பெரிய திரைகளில் பார்க்கக்கூடியவாறு லண்டன் விஞ்ஞான அரும் பொருட்காட்சிசாலை ஒழுங்கு செய்துள்ளது. அதிலும் மிக விசேடமாகப் மூளையைப் பற்றிய சத்திரசிகிச்சை ஒளிபரப்பியது எல்லோரையும் மிகக் கவரக்கூடியதாக இருந்தது. இந்த 40 நிமிட சத்திரசிகிச்சை 3.5 சென்ரி மீற்றர் தடிப்புள்ள ரயூமரினை அகற்றுவதற்காகச் செய்யப்பட்டதாகும். மிகவும் துல்லியமாகச் செய்யப்பட்ட இந்தச் சத்திர சிகிச்சை ஏறக்குறைய 120 பார்வையாளர் முன்னிலையில் விசேடமாக அரங்கேறியது. அதிலும் மிக துல்லியமான டிஜிற்றல் திரையில் இதை ஒலிபரப்பியது அநேகருடைய கண்களையும் கவரக்கூடியதாக இருந்தது. இந்தச் சிகிச்சை அமெரிக்காவின் நியூஜேசி வைத்தியசாலையில் நடைபெற்றது. 71 வயதான ஒர் ஆணின் மூளை சிகிச்சைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இதைப் பார்த்துக்கொண்டிருந்தவர்களின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வடித்ததாகக் கூறப்படுகிறது.



# கொமெடி வைரஸ்

இலத்திரனியல் அஞ்சல் மூலம் கணினியைத் தாக்கக்கூடிய பாரிய வைரஸ்கள் கொமெடித் தகவல்கள் மூலம் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதன் காரணமாக தங்களுக்கு வருகின்ற ஈமெயில்களை உடைத்துப் பார்ப்பதில் கணினிச் சொந்தக்காரர்கள் பின் தங்கி வருகிறார்கள்.



தற்போது சந்தைக்கு வந்திருக்கின்ற கணினி வைரஸ்களாக ஜோக் மற்றும் பிறைஸ் ஆகியன அடையாளம் காணப் பட்டிருக்கின்றன. இந்த வைரஸ்கள் வின்டோ -95 98 எம் ஈ என்ரீ 2000 அத்துடன், எக்ஸ் பீ ஆகியவற்றை இலகுவில் தாக்கக் கூடியவாறு அமைக் கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் கண்டு பிடிக்கப்பட்ட எல்லாவகையான வைரஸ் எதிர்ப்பு நிகழ்ச்சித் திட்டங்களும் இந்த இரண்டு வைரஸ்களின் முன்னால் பலனற்றதாக இருக் கின்றன.

தற்போது வின்டோஸ் - எக்ஸ் பீ கணினிகள் ஒரளவுக்கு இவற்றை எதிர்ப்பதாகக் கூறப்படுகிறது. ஆனாலும், பிரபல கணினிக் கம்பனிகள் இவற்றை அழிக்கக்கூடிய எதிர்ப்பு வைரஸ்களை கண்டுபிடிக்கக்கூடிய அனைத்து வேலைகளிலும் மும்முரமாக இறங்கியிருக்கின்றன. இவற்றுக்கான எதிர்ப்பு வைரஸ்களை ஈமெயில் மூலமாக அனுப்பக் கூடியவாறு நிகழ்ச்சித் திட்டங்களும் கணினி மென்பொருளும் உருவாக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

## திரை விமர்சனம்




பெயரே மாதிரியாக இருக்கின்றதே என்று நினைக்க வேண்டாம். பாரதிராஜாவால் வாழ்த்துப்பெற்ற படம் இது.

கண்பார்வை இழந்த ஒரு சிநேகா வயலின் இசைக்கலைஞர். அவருக்கு ஒப்பிரேஷன் செய்யப்படுகிறது.

ஒப்பிரேஷன் முடிந்ததும் சிநேகாவின் கண்களுக்கு மட்டும் ஒரு நபர் தெரிகிறார். மற்றவர்கள் இதனை நம்ப மறுக்கிறார் கள். ஒரு மாதிரியான பேய்ப்படம் என்றும் இதனைக் கூறலாமோ என்று தோன்று கிறது. சில காட்சிகள் – அண் மையில் வெளிவந்த ஷாக் படத்தை ஒத்ததாக உள் ளன. சிநேகாவை இந்தப் படம் பேயாட்டம் போட வைக்கிறது. சண்முகராஜன் பேய்க்காவலனாக வருகிறார். ஒரு நல்ல நடிகனைப் பாழாக்கியிருக்கின்றார்கள்.



பேயாகவரும் சுஹாவின் நடிப்பு பரவாயில்லை. அப்பாஸ், சுகன்யா, கசன்கான் விஜயன் என ஒரு பட்டாளமே நடித்திருக்கிறது. இதற்குள் புது அறிமுகம் அரவிந்வேறு.



யுவன்சங்கர் ராஜாவின் இசையில் பாடல்கள் மற்றும் பண்ணிசை சிறப்பாக இருக்கின்றது. பி. செல் வகுமாரின் ஒளிப்பதிவு அற்புதம். இதற்குப் பால குமாரின் வசனம் தேவையா?

இயக்குநர் ரமேஷ்கண்ணா ஒரு புதுமையைப் புகுத்த நினைத்ததைப் பாராட்டலாம்.

'அது' அந்தமாதிரி அல்ல.

- தர்ஷா -

## விண்வெளித் திரைப்படம்

விண்வெளி உலகின் கதாபாத்திரங்களை வைத்துப் படம் எடுக்கின்ற திரைப்படத் தயாரிப்பாளருக்கு தற்போது கூடுதலான பொறுப்பு வந்திருக்கிறது. ஏனெனில், அவர்கள் டிஜிற்றல் முறையில் விண்வெளித்திரைப் படங்களை எடுத்து, அவற்றை டிவிடியில் பார்க்கக் கூடியவாறு சி.டிக்களாக வெளியிட்டு வருகிறார்கள். 1977 ஆம் ஆண்டு முதற்தடவையாக விண்வெளித் திரைப்படமாகிய ஸ்டார் போஸ் வெளியிடப்பட்டது. அதன் பிறகு தொடர்ச்சியாக வந்த படங்கள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றன.



விண்வெளி சம்பந்தமாக எடுக்கப்புடுகின்ற திரைப்படங்கள் பின்பு கணினி மூலம் பல தரப்பட்ட மாற்றங்களை பெறுகின்றது. கணினி மூலம் பலதரப்பட்ட மாற்றங்களைப் பெறுகின்றது. கணினித் தொழில் நுட்பமூலம் படங்களில் சில இடைச் சேர்க்கைகள் டிஜிற்றல் தொழில் நுட்பங்கள் அதனுடன் கூடிய ஒலி அமைப்புக்கள் ஆகியன மிக முக்கியமானவை ஆகும். அமெரிக்காவில் வெளியிடப்படுகின்ற சில விண்வெளி சம்பந்தமான திரைப்படத் தயாரிப்பாளர்கள் புதிய புதிய வடிவமைப்புடன் கூடிய படங்களை வெளியிடுவதில் மிக ஊக்கமாக இருக்கிறார்கள். சாதாரண படங்களைப் பார்த்து வெறுத்துப் போய் இருக்கின்ற வெளிநாட்டுமக்கள் விண்வெளி உலகினில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

## கான்சர் - புதிய மருந்து



புற்றுநோய்க்குரிய மருந்தைப் பல நாட்டு விஞ்ஞானிகள் பல்வேறா கக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து உலகில் தலைசிறந்த மருத்துவ விஞ்ஞானிகள் எல்லோரும், வியன்னா என்ற இடத்தில் கூடி, புற்றுநோய்க்கான சிகிச்சை முறைகளை ஆராய்ந்தார்கள். அவற்றின் விளைவாகப் புற்று நோய் மருந்து கண்டு பிடிப்பில் பல அதிர்ச்சி தரக்கூடிய முன்னேற்றங்கள் நிகழக் கூடியதாக இருக்கின்றதென கூறப்படுகிறது.

வருடாந்தம் 38 ஆயிரம் மக்கள்வரை ஐரோப்பாவில் புற்றுநோயால் பாதிக்கப்படுகிறார்கள். அவற்றில் ஏறக்குறைய 60 பேர்வரை உடனடியாக இறந்து விடுகிறார்கள். 50 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட தொடர் ஆராய்ச்சியின் விளைவாக 5-FU என்ற புற்று நோய் மருந்து ஓரளவுக்குப் புற்று நோயை குணமாக்கக் கூடியதாகக் காணப்படுகிறது. தற்பொழுது இந்தச் சிகிச்சை 2246 புற்றுநோயாளர்களில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை – ஒக்சாலி பிளாட்டின் என்ற புற்றுநோய் மருந்தும் இதனுடன் சேர்த்துப் பாவிக்கப்படுகிறது. ஆனால் அது 25 சதவீதம் தான் வெற்றியை தரக்கூடியதாக இருக்கும். மேலும் சில கண்டுபிடிப்புக்களை 2006 ஆம் ஆண்டு மே மாதத்தில் காணக்கூடியதாக இருக்கும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.

## பாலூட்ட வேண்டிய பண்டா



இராட்சத பண்டாக்கள் உலகலாவியரீதியில் அழிந்துகொண்டு வருவது யாவரும் அறிந்தது. ஏறக்குறைய சீனாவில் மட்டும் 1500 பண்டாக்கள் காணப்படுகின்றன. தற்போது பண்டாக்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ, அவற்றைக் கண்டுபிடிப்பதற்கு டிஜிற்றல் தொழில் நுட்பங்கள் பாவிக்கப்படுகிறது.

இவற்றுக்கு மிகவும் விருப்பமான உணவு மூங்கில்களாகும். மூங்கில் பற்றிய செயற்பாடுகளை வைத்துக் கொண்டு டிஜிற்றல் தொழில் நுட்பம் மூலம் பண்டாக்களை கண்டுபிடிக்கும் முயற்சி தொடங்கியுள்ளது. அதாவது மூங்கில்களுக்கிடையில் காணப்படுகின்ற ஒர் தாவரவியல் அம்சம் கருத்தில் எடுக்கப்பட்டு, அது ஒரு வயலஸ் நெற்வேக் மூலம் உலகளாவிய ரீதியில் பரப்பப்பட்டுள்ளது.

இது பின்பு இன்ரநெட் மூலம் பண்டாக்களை அடையாளம் காணக்கூடியதாக இருக்கும். சீனாவினுடைய ஆய்வாளர்கள் அழிந்து வருகின்ற பண்டா இனங்களை இந்தத் தொழில் நுட்பத்திறன் மூலம் கண்டுபிடித்து, அதன் மூலம் அவற்றைப் பாதுகாப்பதற்கு பெருமுயற்சி எடுத்து வருகிறார்கள். இதன் மூலம் அருகிவரும் பண்டா இனங்களைக் காப்பாற்றக்கூடிய ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

## அழகான இயற்கைக் காட்சிகள்

இயற்கைக் காட்சிகளைத் துல்லியமாகப் படம் எடுப்பதற்கு நவீன வகையான தொழில் நுட்பங்கள் தற்போது கண்டறியப்பட்டுள்ளன. இவை சாதாரணமாக எடுக்கப்படுகின்ற படங்களைக் காட்டிலும், மிகவும் துல்லியமானதாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. அத்துடன் ஏறக்குறைய 18500 படங்கள்வரை 50 நாடுகளில் எடுக்கப்பட்டு, அவை தற்பொழுது ஐரோப்பாவில் அருங்காட்சியகத்தில் வைத்திருக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.



இந்தப் படங்களில் காணப்படுகின்ற இயற்கைக் காட்சியை நேரில் பார்ப்பது போன்ற பிரமையை ஏற்படுத்துகிறது. ரெக்சாஸ் என்ற இடத்தில் எடுக்கப்பட்ட படங்கள் குறிப்பாக – மலர்கள் மிகவும் அற்புதமாகக் காணப்படுகின்றன. நியூசிலாந்து நாட்டில் எடுக்கப்பட்ட விதம் விதமான ஆமைகள் அந்த நாட்டிலே இருப்பது போன்ற பிரமையைப் பார்ப்பவர்களுக்கு ஏற்படுத்துகிறது. இந்தப் படங்கள் யாவும் சாதாரணமான கமராக்களால் எடுக்கப்படவில்லை. இவை நவீன டிஜிற்றல் தொழில்நுட்பமுறை கொண்ட கமராக்களால் எடுக்கப்பட்டு, அத்துடன் கணினி முறையில் சரிசெய்யப்பட்ட படங்களாகவே தற்போது காணப்படுகின்றன.

இந்தப் படங்களின் நிறக்கலவை மிகவும் வித்தியாசமானயாவையாகக் காணப்படுகிறது.

## மலிவான வீட்டுத் தொலைபேசிகள்

தொடர்ந்து மொபைல் தொலைபேசிகள் வந்துகொண்டிருந்தால், வீட்டுத் தொலைபேசிகளின் எதிர்காலம் என்ன? என்ற கேள்வி தற்போது எழுந்திருக்கிறது. உண்மையில் வீட்டுத்தொலைபேசிகள் கட்டணத்திலும் சரி, வாடகையிலும் சரி மலிவானவை. ஆனால் மக்கள் கையடக்கத் தொலைபேசிகளையே அதிகம் விரும்புகிறார்கள். நொக்கியா கையடக்கத் தொலைபேசியின் அனுசரணையுடன் ஒரு கருத்துக் கணிப்பு ஒன்று எடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி 45 மில்லியன் மக்கள் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க தென்கொரியா நாடுகளில் கையடக்கத் தொலைபேசிகளைப் பாவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆண்கள் பெரும்பாலும் கையடக்கத் தொலைபேசிகளுடனேயே வலம் வருகிறார்கள்.



ஆனால், பெண்களில் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் இதனைப் பாவிப்பதில்லை. தற்போது சில நாடுகளில் வீட்டுத் தொலைபேசிகளை வழங்கும் நிறுவனங்கள், அவற்றைக் கையடக்கத் தொலைபேசியமைப்பாக மாற்றினால் என்ன என யோசிக்கும் அளவுக்கு வீட்டுத் தொலைபேசிப் பாவனை குறைந்துவிட்டது. இதனை நிவர்த்திசெய்வதற்குரிய உடனடித்தீர்வு விலைக்கு நைப்புத்தான். ஆகவே, மிகவும் மலிவான விலையில் வீட்டுத்தொலைபேசி வசதிகளைச் செய்துதர அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் தயாராகிவிட்டன.



வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வாணி விழாவின் போது மகாவித்தியாலய சிறார்களின் நடனம்.

படம்: வே.சீலன்

## பூநகரியில் அரும்பொருள் காட்சியகம்

பூநகரிப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒல்லாந்தர் காலக் கோட்டைக்கு சமீபமாக அரும்பொருள் காட்சியகம் ஒன்றை அமைத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளால் பூநகரி இராணுவத்தளம் மீது மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பரேசன் தவளை' இராணுவ நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட கனரக ஆயுதங்கள், கவச வாகனங்களின் பாகங்கள், அந்தப் பகுதியில் மீட்கப்பட்ட தொல்பொருள் சின்னங்கள் என்பன அரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட இருப்பதாக பூநகரிப் பிரதேச சபையின் செயலர் பவானி தெரிவித்தார்.



கிளிநொச்சி நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்டுவரும் அறிவியல் நகரினூடாகச் செல்லும் பிரதான வீதியைப் படத்தில் காணலாம்.

# எதிர்வரும் மாவீரர் நாளையொட்டிய கிராமங்கள் தோறும் கலந்துரையாடல்

இந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழீழ தேசிய மாவீரர்நாள் முன்னெடுப்பு வேலைகள் தமிழர் தாயகம் எங்கும் இடம் பெற்றுவருகிறது.

இந்த ஆண்டு மாவீரர்நாளை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் மாவட்ட, கோட்ட, கிராம ரீதியாகவும் இடம்பெறும்.

தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவை மற்றும் பொது அமைப்புக்கள் என்பன இணைந்து இந்த ஆண்டு மாவீரர்நாளைச் சிறப்பாக முன்னெடுக்கத் தயாராகி வருகிறது.

மல்லாவிப் பிரதேசத்தில் இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தக சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் கிளிநொச்சி, வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் ஆகிய பிரதேசங்களில் மாவீரர்நாளை முன்னிட்டுக் கருத்தரங்குகள் நடைபெறுவதுடன், சிரமதானப் பணிகளும் நடைபெறுகின்றன.

இதேவேளை நேற்றுமுன்தினம் பொது அமைப்புக்களுக்கான கலந்துரையாடல் இடம்பெற்றது. அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சபாரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கருத்துரைகளை அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் வழங்கினார்.

கடந்த 29 ஆம் திகதி மாவீரர் நாளை முன்னிட்டு, ஆனைவிழுந்தான் பைந்தமிழ் மாவீரர் படிப்பக வளாகம் இந்தப் பகுதி மக்களால் சிரமதானப் பணிமூலம் துப்பரவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா பிரதேசத்தில் மாவீரர் நாள் ஏற்பாடுகள்

(வவுனியா)

வவுனியா பிரதேசத்தில் தமிழீழ மாவீரர் நாள் ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

பிரதேச ரீதியாக இந்தக் கருத்தரங்குகள் இடம்பெறுகின்றன. இத்துடன் இந்தப் பிரதேச மக்களால் கிராமங்கள் தோறும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளை இந்தப் பிரதேசத்தில் மாவீரர் நாளையொட்டி விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலை அணிகளுக்கும், வவுனியா மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கும் தனித்தனியே போட்டிகள் நடைபெறும்.

இந்தப் போட்டிகள் மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படவுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கான மென்பந்து, பூப்பந்து, கால்பந்து இவற்றுடன் மரதன் ஓட்டப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

# அடிப்படை வசதிகள் இன்றி வாழும் மன்னார் இலுப்பைக்கடவை மக்கள்

(மன்னார்)

மன்னார் இலுப்பைக்கடவை மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி மிக நீண்டகாலமாக பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த பிரதேசத்தில் 75இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில், இவர்களுக்கான நிரந்தர வீடுகள், தொழில் வாய்ப்பு, போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமையால், அவர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

தற்போது மழைகாலம் ஆகையால் இங்கு பல தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இங்கு மருத்துவ வசதி, போக்குவரத்து வசதி இன்மையால் மக்கள் ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகிறது.



வன்னிப் பதிவுகள்

## வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டம் - மல்லாவியில் தமிழீழ மாவீரர் நாளையொட்டி வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் - எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நாளை சிறப்பாக அனுஷ்டிப்பது தொடர்பாகவும், அவர்களின் பணி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

## வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(ஆனைவிழுந்தான்)

ஆனைவிழுந்தான், வன்னேரிக் கிராமங்களுக்கான வீதிகள் மணல் வீதிகளாகவுள்ளது. இதனால் மழை காலங்களில், வீதிகளில் வெள்ளம் மூடியிருப்பதால் இந்த வீதிகளால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வீதிகளை உலக உணவுத் திட்டத்தின் மூலம் புனரமைப்புச் செய்துதருமாறு சம்பந்தப்பட்டவர்களை அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ஸ்ரீ)

## புதிய பஸ்சேவை ஆரம்பம்

வடமராட்சி கிழக்கு கேவில் பிரதேசத்தில் இருந்து வவுனியா - புளியங்குளம் வரை பஸ்சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இதுவரைகாலமும் இந்தப் பகுதியூடான போக்குவரத்துச் சேவை இல்லாமையால், இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் நேற்று இந்தப் பகுதியூடான பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து, இந்தப் பகுதி மக்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்

# அடிப்படை வசதி அற்ற நிலையில் உடையார்கட்டுப் பிரதேசம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - உடையார்கட்டுப் பிரதேசத்தில் பஸ்தரிப்பிடம், வடிகால் இல்லாமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

உடையார்கட்டு மகாவித்தியாலயம், சந்தை ஆகிய பகுதிகளில் பஸ்தரிப்பிடம் இல்லாமையினால் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கொட்டும் மழையில் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கவேண்டிய நிலை காணப்படுகிறது. இந்த நிலை இன்றுவரை நிலவி வருகிறது. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் இந்தப் பிரதேசத்தில் வைத்தியசாலை, பாடசாலை, பொதுச் சந்தை, காவல்பணிமனை, அஞ்சல் அலுவலகம் மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பன அமைந்துள்ள நெருக்கமான பகுதிகளில் வடிகால் இன்மையால் ஆங்காங்கே நீர் தேங்கியுள்ளது.

# உருத்திரபுரம் கத்திகுத்து சம்பவத்தில் சந்தேக நபர் காவற்துறையால் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் பிரதேசத்தில் கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற கத்திக்குத்துக் கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் தமிழீழ காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபரைக் காவல்துறையினர் பூநகரிப் பிரதேசத்தில் வைத்து கைதுசெய்தனர். இந்தச் சந்தேக நபரை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்துவதற்கு என கிளிநொச்சி காவல் பணிமனையினர் தெரிவித்தனர்.

# பிரதேச செயலகங்களிலிருந்து திரும்பிய அடையாள அட்டைகள்

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலர்கள் மூலமாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களின் தேசிய அடையாள அட்டைகள் கிளிநொச்சி செயலகத்திலுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து, கிளிநொச்சி மாவட்டத்தில் தற்காலிகமாக வசித்து, கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலர்கள் மூலமாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களின் தேசிய அடையாள அட்டைகள், கிளிநொச்சி செயலகத்தில் உள்ளன. இவற்றை உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கேட்டுள்ளார்.

அடையாள அட்டை உள்ளவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு-

வெனிஸ்மேரின் மரியராணி 638604639 V, இராசரத்தினம் சசிகரன் 801451730 V, மேரி ஜெயசீலி எட்வேட் 527590914 V, திரவியநாதன அந்தோனியாப்பிள்ளை 557082794 V, கனகராசா யோகச்சந்திரன் 703290060 V, இரட்ணம் பத்மநாதன் 590173125 V, மரியநாயகம் ஜோபற்றசன் 752470391 V, சுப்பன் பாலசிங்கம் 502100467 V, சேகராசசேகரம் கிருஸ்ணராசா 70148-1194 V, செல்லையா உருத்திரலிங்கம் 661681829 V, மரியாம்பிள்ளை றோசலின் 518270346 V, சிவஞானசுந்தரம் கோணேஸ்வரன் 751662-971 V, பரமேஸ்வரி வைத்தீஸ்வரன் 345111328 V, செல்வதி ஜெயசீலன் 808125137 V, சுசீலாதேவி சிவபாலன் 615184462 V, சின்னக்குட்டி ஐயாத்துரை 502637100 V, சேவியர் அக்கினேஸ் லூர்த்தம்மாள் 468613620 V, வீரசிங்கம் சைல்ஜா 796692375 V, இம்மானுவேல் விஜயகுமார் 770533880 V, சோதிவேல் மதிவதனி 797362298 V, சோதிவேல் செல்வானந்தி 766223907 V, முருகேசு அரியகிருஸ்ணன் 490540148 V, வல்லிபுரம் மகாலிங்கம் 54277-2778 V, அலெக்சாந்தர் நிரோஜினி 775223065 V, நாகேந்திரன் விஜியநந்தினி 778643871 V, பரமேஸ்வரன உதயலட்சுமி 726133743 V, தனசேகரம் விக்கினேஸ்வரன் 780464429 V, மாணிக்கம் சுமதி 776014052 V, இராசரத்தினம் பாசமலர் 63677-3026 V, துரைராசா றமியா 79840-3958 V, கந்தசாமி ஜெயக்கொடி 651325666 V, கதிரவேல் சிவகுமார் 810553065 V, சின்னத்துரை யோகநாதன் 642052659 V, கந்தசாமி ஞானசேகரம் 622592940 V ஞானப்பிரகாசம் இராயப்பு 502644130 V, அநதோனி சிறில் ஞானஸ்ரீ 742741-154 V, வீரசிங்கம் மிருதுளா 8079-80823 V, அலெசாண்டர் றூபன் 792102450 V, சாள்ஸ் எமிலியான் கெல்வின்தயான் 781833045 V, வல்லிபுரம் சிவநாதன் 681321870 V, சதாசிவம் சபாரத்தினம் 5423-72990 V, கந்தையா தயானந்தராசா 753092404 V, பரமசிவம் சந்திரகுமாரன் 730194072 V, சிவநாயகம் பரணீதரன் 791352940 V, வடிவேலு குலவீரசிங்கம் 710324492 V, தம்பிமுத்து காந்திமதி 72526-4118 V, சத்தியசீலன் அன்புமலர் 767793685 V, துரைலிங்கம் பாலச்சந்திரன் 783153378 V, கணேசுதவராசா 790554396 V, யேசுதாசன் ஜெயர்சன் பிரேம்குமார் 792892329 V, பூபாலசிங்கம் சோதீஸ்வரன் 623013960 V, அருமைநாயகம் ஜெயபிரசாத் 782214616 V, சின்னராசா கந்தசாமி 502044419 V, செல்லத்துரை நவரத்தினம் 582872465 V, பாக்கியமுத்து பாலச்சந்திரன் 590540447 V, சித்திரா ரமேஸ்வரன் 795925244 V, ஜேம்ஸ் பெலிசியா காமினி 705773807 V, மரியாம்பிள்ளை சூசைப்பிள்ளை 31250-0051 V, பாலசிங்கம் கிருபராணி 776894338 V, பாயக்கல எடிசன் சில்வா 750724876 V.

# வவுனியா தேசிய எழுச்சிப் பேரவையை மீளக்கட்டி எழுப்புவதற்கு நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் நிர்வாகத்தை மீளக்கட்டி எழுப்பும் நடவடிக்கையை, வவுனியா மாவட்ட அரசியற்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 30 ஆம் திகதி வவுனியா மாவட்ட அரசியற்துறை செயலகத்தில் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தேசிய எழுச்சிப் பேரவை எதிர் கொள்ளும் பிரச்சினைகளும், அவற்றைத் தீர்ப்பது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன.

இந்த நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சயன், வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர்.

# குன்றும் குழியுமாக காணப்படும் வட்டக்கச்சி பிரதான வீதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - வட்டக்கச்சி பிரதான வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இந்த வீதி, ஏற்கனவே தார் மூலம் செப்பனிடப்பட்டிருந்த போது, போர் அனர்த்தத்தின்பின் இந்த வீதி புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த வருடம் கிரவல் மூலம் செப்பனிடப்பட்ட சுமார் 10 கிலோ மீற்றர் வரையான வீதி சேதமடைந்த நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

தற்போது தொடர்ந்து பெய்து வரும் மழைகாரணமாக வீதியில் மழைநீர் தேங்கி நிற்பதால், வாகனங்களில் பிரயாணம் மேற்கொள்ளும் போது, அடித்துச் செல்லும் வெள்ளத்தால் வாகனத்தின் அருகில் பயணம் செய்யும் ஏனைய பயணிகள் பாதிக்கப்படுகின்றனர். (ஸ்ரீ)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்*
*இன்னா அறிவி னவர்.*

திருக்குறள்

## நமது நோக்கு

### விஞ்ஞான யுகமும், அறிவியல் தேடலும்....

இன்றைய உலகின் வளர்ச்சிப் போக்கை அதன் சகல பரிமாணங்களிலும் அறிவியலே தீர்மானிப்பதாக உள்ளது என்பதையே மனித குல வரலாற்றில் ஒவ்வொருகட்டமும் உறுதி செய்வதாக உள்ளது.

நாம் வாழும் யுகம் விஞ்ஞானயுகம். என்பதையும் ஏன், எதற்கு எப்படியென வினாவெழுப்பி விளக்கம் கோரித் தெளிவு பெறும் மனிதனின் தேடலுணர்வானது பிரமிக்கத்தக்க அறிவியல் சாதனைகளின் கர்த்தாவாக அவனை முதன்மைப்படுத்தியுள்ளது என்றால் அதில் மிகையில்லை.

தேவைகளே மனிதனைப் புதிய புதிய கண்டு பிடிப்புக்களை மேற்கொள்ளத் தூண்டுகிறது. கண்டுபிடிப்பின் பயனானது நேற்றைய சிரமங்களை மனிதவாழ்வின் சகல அம்சங்களிலும் குறைத்து இன்றைய மனித வாழ்வை இலகுவாக்கி வாழ்வியக்கத்தை வேகமாக்கியும் வருகிறது.

பரந்து விரிந்த இந்த உலகம் அறிவியல் - விஞ்ஞான வளர்ச்சியின் ஆக்கிரமிப்புக்குள் மிகவும் சுருங்கி விட்ட தொன்றான தோற்றம் காட்டிநிற்கிறது.

உண்மையில் இது பிரமிப்பூட்டும் விடயமே..... ஆனாலும் மனித ஆற்றலின் இன்றைய வெளிப்பாடானது, ஒட்டுமொத்தமான அவனது அறிவுத் திறனின் ஒரு சிறு துளியளவேயாகும். மனிதன் பூமிக்கு அப்பால் விண்வெளி மிதந்து பிரபஞ்சரகசியங்களை உய்த்துணரும் இலக்குடன் அறிவியல் ரீதியாகப் பயணிக்கத் தொடங்கி விட்டான்.

பிரமிப்பூட்டும் பிரபஞ்ச வெளியில் ஒரு துகளை வைத்தாலும் அவனால் இதுவரை கண்டுபிடிக்கமுடியவில்லை.... இதனால் அவன் தோற்றுப் போனான் என்று அர்த்தப்பபாது. அவனது தேடல் முயற்சி முடிவற்ற ஒன்று என்றால் அதுவே அறிவியல் யதார்த்தமுமாகும். கடந்த நூற்றாண்டு மனிதன் இன்றைய நூற்றாண்டு மனிதனின் வாழ்வு மேன்மை குறித்து கற்பனை பண்ணியிருக்க மாட்டான். ஏனெனில், அவன் காலத்து மனித சிந்தனைகள் அவனின் சமகாலத் தேவைகளைத் திருப்தி செய்வது குறித்தே பயணித்துக் கொண்டிருந்தது.

இன்றைய மனி தனோ நாளைய மனித குலத்துக்காக, அடுத்தடுத்து வரப் போகின்ற தனது தலைமுறைக்காக சமகாலத் திலேயே அறிவியல் - விஞ்ஞான - தொழில்நுட்ப ரீதியில் மிக ஆழமாகவும், வேகமாகவும் சிந்திக்கத் தொடங்கி விட்டான்.

இந்தத் தொலைநோக்கு சிந்தனை ஒரு அவசி யம் என்பதை இன்றைய மனிதன் மிகவும் தெளிவாகவே உணர்ந் துள்ளான். மனித அறிவு அல்லது அறிவியல் வளர்ச்சியென்பது தான் மானிட வரலாற்றை எழுச்சி கொள்ளவைத்து மனித நாக ரிகத்தை வளர்ச்சி கொள்ள வைக்கிறது என்பார் ஜியோவ் பீற்றர்ஸன்.

அதுவே உண்மையும் சத்தியமுமாகும்.

எமது தமிழ்மக்களின் வரலாறும் பிரமிப்பூட்டும் சாதனைகளை அதன் கடந்த சில தசாப்தகால வரலாற்றில் மிக அழுத்தமாகப் பதிவு செய்தே உள்ளது.

போர் நெருக்கடியையும் , பொருளாதார அழுத்தங்களையும் முறியடித்து நாம் இன்று நிமிர்ந்து நிற்கிறோமென்றால் - நாம் விஞ் ஞானபூர்வமாக, அறிவுபூர்வமாக ஆழமாகவே காலத்தின் அவசியத்தைக் கவனத்தில் கொண்டு சிந்தித்துள்ளோம் என்பதுதான் அதற் குப் பொருளாகும்.

தேவைகள் எம்மைச் சிந்திக்க வைத்தது. அழுத்தங்கள் எமக்கு அவற்றை முறியடிக்கும் வழிகளைத் தேடவைத்தது. இந்தச் சிந்த னையும் தேடலும் எமது மனித அடையாளங்களை எதிரி சிதைப்பதி லிருந்து எம்மைப் பாதுகாக்க வைத்தது.

கடந்த சிலநாட்களாக யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்களால் நடத்தப்பட்டுவரும் அறிவியல் விஞ்ஞானக் கண்காட்சி- விஞ்ஞான வளர்ச்சியின் பல பரிணாமங்களையும் ,அதன் அடிப்ப டைகளையும் எமது இளைய தலைமுறையினருக்கு மட்டுமல்ல நமது சமகாலப் பாமரர்களுக்கும் உணர்த்துவதாக அமைந்திருக்கிறது என்றே கூறவேண்டும்.

அறியவேண்டியவற்றில் ஒரு சிறுபகுதிதான் இது எனினும் இதன் அறிவியல் கடமை நோக்கு மதிக்கப்பட வேண்டியதாகும்.

நாளைய உலகை நோக்கிய நமது பயணமும் நாம் எதிர் கொள்ளப்போகின்ற அறிவியல் மகோன்னதங்களும் எத்தகையதாக இருக்கப்போகின்றதென்பதை சமகாலத்தவர்க்கும், எதிர்காலத் தலை முறையினருக்கும் உணர்த்துவதில் இக்கண்காட்சி வெற்றி பெற்றுள்ளதென்றே கூறவேண்டும்.

இதுபோன்ற கண்காட்சிகள் நமது தாயக மண்ணின் சகல பிரதேசங்களிலும் அடிக்கடி நடைபெறவேண்டியது அவசியமாகும். நாம் அறிவியல் பூர்வமாக செயற்படவும் , விஞ்ஞான ரீதியில் சிந்திக் கவும் இதுமிக முக்கியமானது என்பதை அறிவுசார் சமூகத் தவர்கள் ஆழமாகச் சிந்திப்பது காலத்தின் அவசியமாகும்.

## நாடும் நடப்பும்




### தமிழ்த்தேசியத்தை வலுப்படுத்த

# அனைவரும் உறுதிபூண்டுள்ளதாலேயே எமது போராட்டம் மதிக்கப்படுகிறது!

### நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

இன்று எமது போராட்டம் மதிக்கப்படுவதற்குக் காரணம் தமிழ்மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்த உறுதி பூண்டு நின்றதனாலேயே என துன்னாலை - கோயிற்கடவை சனசமூக நிலையத்தின் வெள்ளி விழாவுக்கும் பரிசளிப்பு விழாவிற்கும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் -

தமிழினத்தை விற்று சுயலாபம் கருதிய தமிழ்க்குழுக்கள் இன்று நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் அனைவரும் தமது ஏகபிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதை எடுத்துக்காட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்துள்ளனர்.

அந்தவகையில், இந்தப் பகுதி மக்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். இந்தப் பிரதேசம் பல புத்திஜீவிகளையும் அறிஞர்களையும், உருவாக்கியது மட்டுமல்லாது போராட்ட வரலாற்றில் கரும்புலி படையின் முதற்கரும்புலி கப்டன் மில்லரையும் உருவாக்கியுள்ள பெருமையையும் பெற்றுள்ளது.

எங்கெங்கு சனசமூக நிலையங்கள் பொது அமைப்புக்கள் செயற்படவில்லையோ அங்கங்கெல்லாம் சமூக சீர்கேடுகளும், கலாசார சீர்கேடுகளும் இடம்பெற்றுவருகின்றன.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் ஒரு கிராமத்து மக்கள் ஒரு கட்டுக்கோப்பாக இருந்துவருவார்களானால் அவர்கள் ஒற்றுமையான ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும்.

ஆகவே, கலாசார சீரழிவுகளைத் தடுப்பதற்கு சனசமூக நிலையங்களின் பங்களிப்பு அவசியம். எனவே ஒவ்வொரு ஊரிலும் சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் நல்ல முறையில் இயங்கவேண்டும். அப்போதுதான் அந்தக் கிராமம் ஒரு சிறந்த இளம் சமுதாயத்தை உருவாக்க முடியும் என்றார்.

இந்த விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கி. சிவநேசன், எம்.கே.சிவாஜிலிங்கம், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர். (17)

## மோசமான நிலையில் ஊர்காவற்துறை வீதி

மிகமோசமாகச் சேதமடைந்துள்ள யாழ் - ஊர்காவற்றுறை வீதியால் போக்குவரத்தில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியின் மோசநிலை காரணமாக வாகன சாரதிகள் தமது வாகனங்களை தரவைகள் வழியாகவே செலுத்தி வந்தனர். தற்போது ஆரம்பித்துள்ள பருவ மழை காரணமாக இத்தரவைகள் நீர் நிரம்பிவிட்டதால் இவ்வீதியால் பயணம் செய்வதில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் வாகனங்களும் அடிக்கடி பழுதடைகின்றன.

இவ்வீதியின் ஒரு பகுதி கடந்த மாதம் தற்காலிகமாக தார் ஊற்றி கிடங்குகள் மூடப்பட்டதுடன் பெரும்பகுதி புனரமைக்கப்படாது காணப்படுகின்றது. இது குறித்து வாகன சாரதிகளும் பயணிகளும் விசனம் தெரிவித்தனர். (99)

## கட்டுரை வினா விடைப் போட்டி

உலக விஞ்ஞான தினமாகிய நவம்பர் 10 ஆம் திகதியை முன்னிட்டு, பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியும், வினாடி வினாப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

கட்டுரைப் போட்டிகள் எதிர்வரும் 4 ஆம் திகதியும், வினாவிடைப் போட்டி 5 ஆம் திகதியும் யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கட்டுரைப் போட்டியில் உயர்தர வகுப்பு மாணவர்கள் மாத்திரமே பங்குபற்றமுடியும். வினா - விடைப் போட்டியில் 6 தொடக்கம் 11 வரையிலான மாணவர்கள் பங்குபற்ற முடியும். (122)

## வாகனங்களை அவதானமாக செலுத்துமாறு கோரிக்கை!

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளமையால் வாகனச் சாரதிகள், பயணிகள் அவதானமாகச் செயற்படவேண்டுமென வடமராட்சிப் பிரதேச பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மழைகாலமாகையால் வீதிகள் வழுக்கும் தன்மையுடையனவாகக் காணப்படுகின்றமையாலும், அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள விபத்துக்களால் அநியாய உயிரிழப்புக்கள் ஏறபட்டிருக்கின்றன.

எதிர்காலத்தில் விபத்துக்களைத் தவிர்க்கவேண்டும். சாரதிகள் வேகத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கத் தவறியமையே அநேக விபத்துக்களுக்கு காரணம் எனவும், எனவே வாகனங்களை அவதானத்துடன் செலுத்துமாறு பொலிஸார் கோரியுள்ளனர். (14)

## மாணவர் பேரவை ஏற்பாட்டில் ஆங்கிலப் பயிற்சி நெறி!

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் மேற்படிப்புக்களை தொடரும் மாணவர்களுக்கான ஆங்கில பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன.

யாழ் குடாநாட்டில் மேற்படிப்புக்களை பயின்றுவோரிடம் ஆங்கில அறிவு குறைவாகக் காணப்படுவதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதனடிப்படையில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை ஏற்பாட்டில் ஆங்கில பாட பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் யாழ். பரமேஸ்வரா சந்தியிலுள்ள தலைமை அலுவகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## கருணா குழுவைச் சேர்ந்த 6 பேரின் விபரங்களை தருமாறு விடுதலைப் புலிகள் கோரிக்கை!

கருணா குழுவைச் சேர்ந்த ஆறு பேர் தொடர்பான தகவல்களை தந்துதவுமாறு விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை பொதுமக்களைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக இந்த ஆறு பேரின் புகைப்படங்களுடன் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டு பொது இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

சின்னத்தம்பி, மார்க்கன், மங்களன், இனியபாரதி, உருத்திரா, பிள்ளையான் ஆகியோரின் பெயர் விபரங்களே வெளியிடப்பட்டுள்ளன.

எம்முடன் சண்டையிட்டு வலுவிழந்த துரோகிகள் - இராணுவத்துடன் இணைந்து மண்ணை நேசிக்கும் மக்களை கோழைத்தனமான முறையில் படுகொலை செய்து வருகின்றார்கள்.

இந்தத் துரோகிகளை இனங்கண்டு பொதுமக்கள் தகவல்களை தந்துதவவேண்டும் என்று "எஞ்சியிருக்கும் துரோகிகளை இனங்காண்போம்" என்ற தலைப்பில் அந்த துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடப்பெயர்வு பதிவுகள்

த.அருவி

# எமது நிலம் எமக்கு வேண்டும்... நாம் சுதந்திரமாக வாழவேண்டும்



மறக்கமுடியுமா?... மனதை உலுப்பும் இந்த அவலக்குரல்களை மறக்கத்தான் முடியுமா? ஒன்பது ஆண்டுகள் கடந்தும் எம் செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கும் அவலக்குரல்கள் எம் நெஞ்சை விட்டு நீங்குமா?

ஆம் ஒன்பது ஆண்டுகளின் முன் இதேநாள்... தமிழனின் வரலாற்றில் பதியப்பட்ட அவலம் நிறைந்த நாள்... உலக மனங்களை உலுப்பிய மறக்க முடியாத நாள்...

2000 ஆம் ஆண்டுகள் இடப்பெயர்வின் அவலத்தை அனுபவித்த யூதர்களின் வரலாற்றில் அழியாத அடையாளமாய் அமைந்துவிட்ட எக்ஸோடஸ் போல்.... தமிழர் வரலாற்றில் அழியாத அடையாளமாய் அமைந்துவிட்டது.

ஒக்ரோபர் 30 - யூதர்களின் வரலாற்றில் 1948 ஆம் ஆண்டு இஸ்ரேல் என்ற தாயகம் உருவாகும் வரை, அவர்கள் உலகில் கொடூரமாய் ஒதுக்கப்பட்டார்கள்.

பைபிள்கால பேரிடப் பெயர்வு ஒன்றே எக்ஸோடஸ். அநதப் பாரிய இடப்பெயர்வுக்கான அடையாளமாய் எக்ஸோடஸ் அமைந்துவிட்டது. அதேபோல் தமிழர் வாழ்வில் ஏற்பட்ட பேரிடப் பெயர்வின் அடையாளமாய் அமைந்து விட்டதுதான் ஒக்ரோபர் 30.

ஒக்ரோபர் 30 - தமிழர் தாயக வரலாற்றில் மிக முக்கியநாள். இது... யாழ்ப்பாணம் வலிகாமத்தை விட்டு ஒட்டுமொத்தமாக 5 லட்சத்துக்கு அதிகமான மக்கள் - ஒன்றாய் பேரவலப்பட்டு, இடமபெயர்ந்து விடுதலைக்கு வலுச்சேர்த்த நாள்.

**1995 ஆம் ஆண்டு** இதேநாள் சூரியக்கதிர் மூலம் சிங்களப்படைகள் ஆக்கிரமித்த நடவடிக்கையின்போது இந்தக் பேரவலம் நிகழ்ந்தது.

தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இடப்பெயர்வு நாள் அது. இந்த நாளில் தமிழ் மக்கள் அந்தப் பேரவலத்தை மீட்டுப் பார்க்க வேண்டும். விடுதலையின் வலுவை உணரவேண்டும். இங்கு தமிழர் தாயக இடப்பெயர்வுகளை ஒரு தடவை மீட்டுப்பார்ப்போம்.

தமிழர் தாயகத்தில் தமிழர் இடப்பெயர்வு **1957 ஆம் ஆண்டு** அம்பாறை - பட்டிப்பளையில் கல்லோயா சிங்களக்குடியேற்றத்தின்போது, தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறையால், அந்த இடப் பெயர்வு நிகழ்ந்தது.

அதன் பின் **1990 ஆம் ஆண்டு** வரை அம்பாறையில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்திய வன்முறைகளாலும், படையினர் சிங்கள - முஸ்லிம் ஊர்காவல் படை என்ற காடையர் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள், படுகொலைகளாலும் தமிழ் மக்கள் சொந்த இடங்களைவிட்டு இடம் பெயர்ந்தனர்.

மட்டக்களப்பில் **1980 ஆம் ஆண்டு**களில் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புகளால் இடப்பெயர்வுகள் நிகழ்ந்தன.

அதேபோல் திருகோணமலையிலும், சிங்களக் குடியேற்றங்களினாலும், இராணுவ வன்முறைகளாலும் மக்கள் இடப்பெயர்வுகளைச் சந்தித்தனர்.

இன்னமும் அந்த மக்கள்- முழுமையாகத் தம் சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியவில்லை. **1990 ஆம் ஆண்டு** இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமானபோது, தென் தமிழீழத்தில் பேரவலமிகு தமிழர் இடப்பெயர்வு இடம்பெற்றது.

அம்பாறைமுதல் திருகோணமலைவரை முஸ்லிம் காடையர்கள், சிங்களக்காடையர்கள் நடத்திய வன்முறை - கொலை வெறியாட்டத்தால், ஒரு லட்சம் வரையான மக்கள் தம் உடமைகளை இழந்து, உயிர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்காக வடதமிழீழம் நோக்கி - பல நூறு மைல்களைக் கால் நடைப்பயணத்தில், மரணப்பொறியான மணலாறு சிங்கள இராணுவ கேந்திரங்கள் ஊடாக, இடம் பெயர்நது வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும் தஞ்சமடைந்தனர்.

இவர்களின இடப்பெயர்வு அவலம் மிகக் கொடுமையானது. காடுகளூடாக, சிங்களப் படைகளின் நிலைகளூடாக இரவு பகலாக கால் நடையாக கடந்த அந்த அவலத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

வடதமிழீழத்தில் முதல் இடப்பெயர்வு - **1984 இல்** மணலாறு, ஒதியமலை. கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் உள்ளிட்ட பகுதி மக்கள் படுகொலை செய்யப்பட்டு, 24 மணிநேரத்தில் இராணுவத்தால் விரட்டப்பட்டதாகும்.

ஒதியமலையைத் தவிர ஏனைய இடங்களில் இன்னமும் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

**1987 ஆம் ஆண்டு** முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பால், மக்கள் இடப்பெயர்வு நிகழ்ந்தது. இந்திய இராணுவ ஆக்கிரமிப்பில் தமிழர் தாயகப் பகுதியெங்கும் மக்கள் இடம்பெயர நேரிட்டது.

வவுனியாவில் **1990 ஆம் ஆண்டு** நொச்சிமோட்டையை ஆக்கிரமிக்க - சிங்களப் படைகள் பூந்தோட்டம், இளமருதங்குளம் ஊடாக மேற்கொண்ட பாரிய படை நடவடிக்கையின்போது, தமிழர்களின் இடப்பெயர்வு அவலம் ஆரம்பமானது.

கண்டிவீதியில் படைகள் தொடர்ந்து மேற்கொண்ட வன்னி விக்கிரம ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின்போது, வவுனியா மாவட்டப் பகுதிகளில் மக்கள் இடப்பெயர்வுகள் நடந்தன.

அதேவேளை வவுனியாவின் மேற்கே செட்டிக்குளம், பூவரசங்குளம் பகுதிகளில் **1991 ஆம் ஆண்டு** படைகளால் மேற்கொள்ளப்பட்ட 'கறுப்புநரி' ஆக்கிரமிப்பு நடவடிக்கையின்போது, அந்தப் பகுதி மக்கள் - முழுமையாக இடம்பெயர்ந்து, மடுவில் தஞ்சமடைந்தனர்.

**1997 ஆம் ஆண்டில்** வவுனியா மன்னார், வீதி 'எடிபல' நடவடிக்கை மூலம் சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டவேளை, அந்தச் சாலையோர கிராமங்கள் யாவும் இடம்பெயர்ந்தன.



மன்னாரில் **1991 ஆம் ஆண்டு** 'பச்சைப்பட்டி' ஆக்கிரமிப்பு நடவடிக்கையின்போதும் **1999 ஆம் ஆண்டு** 'ரணகோஷ 1' முதல் 5 வரையான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின்போதும் மன்னார் மக்கள் இடம்பெயர்ந்து அவலமுற்றனர்.

கிளிநொச்சியில் **1986 ஆம் ஆண்டில்** படையினர் ஆனையிறவிலிருந்து, பரந்தனுக்கு முன்னேறியபோதும், பரந்தனில் இருந்தபோதும் கிளிநொச்சியில் படை முகாம் விரிவாக்கப்பட்டபோதும், கிளிநொச்சி நகரமும், பரந்தனும் இடம்பெயர்ந்தன...

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் கிளிநொச்சிக்கு மீண்ட மக்கள் 1990 ஆம் ஆண்டு 2 ஆம் ஈழப்போரில் கிளிநொச்சிப் படையினரை மீட்க, ஆனையிறவு சுட்டதீவுப் பகுதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட படை ஆக்கிரமிப்பின்போது, கிளிநொச்சி மக்கள் இடம்பெயர்ந்தனர்.

**1991 ஆம் ஆண்டு** - பூநகரி 'வலம்புரி' நடவடிக்கை மூலம் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டபோது, அது முழுமையாக இடம் பெயர்ந்தது.

**1996 ஆம் ஆண்டு** - 'சத்ஜய' படை நடிவடிக்கை மூலம், கிளிநொச்சி நகரம் சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டபோது, கிளிநொச்சியில் வளமிகு பகுதிகளைவிட்டு மக்கள் இடம் பெயர்ந்தனர்.

இதன்போது 'சூரியகதிர்' நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்து கிளிநொச்சியில் தங்கியிருந்த மக்களும் மீண்டும் ஒரு இடப்பெயர்வு அவலத்தை சந்தித்தனர்.

**1997 ஆம் ஆண்டு** வவுனியா நொச்சிமோட்டையிலிருந்து சிங்களப் படைகள் மேற்கொண்ட 'ஜெயசிக்குறு' ஆக்கிரமிப்பு நடவடிக்கையால், வவுனியாவின் வடபகுதி, வடமேற்குப்பகுதி, முல்லைத்தீவின் ஒட்டுசுடடான், மாந்தைக் கிழக்குப் பகுதிகளிருந்து மக்கள் இடம் பெயர்ந்தனர்.

முல்லைத்தீவில் **1990 ஆம் ஆண்டு** 'கடற்காற்று' நடவடிக்கையின் மூலம் - முல்லைத்தீவு நகரம் சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டபோது, அது முழுமையாக இடம்பெயர்ந்தது.

**1999 ஆம் ஆண்டு** வவுனியாவின் வடமேற்கில் மேற்கொள்ளப்பட்ட 'ரணகோஷ 1' நடவடிக்கைக்கையாலும் மக்கள் இடம் பெயர்ந்தனர்.

**1996 ஆம் ஆண்டு** முதல் **1999 ஆம் ஆண்டு** வரை வன்னி சிங்களப்படைகளின் ஆக்கிமிப்பு நடவடிக்கைகளால் குறுகிய காலங்களில் இடம்பெயர்வுகளாகவே மக்களின் வாழ்வு நகர்ந்தது.

**1998 ஆம் ஆண்டு** 'ரிவிபல'வினால் ஒட்டுசுட்டான் மக்கள் முழுதாக இடம்பெயர்ந்ததையும் குறிப்பிடவேண்டும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை, சிங்களப்படைகளின் 'ரிவிரஷ' விரிவாக்க நடவடிக்கைகளால் மக்கள் இடப்பெயர்வு அவலம் ஆரம்பமாகியது.

**1987 ஆம் ஆண்டு** - வடமராட்சியிலும், அச்சுவேலிப் பகுதியிலும் மேற்கொள்ளப்பட்ட லிபரேசன் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பாரிய இடம்பெயர்வு அவலம் நிகழ்ந்தது.

இதே ஆண்டில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்புத் தாக்குதலின்போது, குடாநாடு முழுமையிலும் இடம்பெயர்வு அவலத்தை அனுபவித்தது. இவை குறுகிய கால இடப்பெயர்வுகளாகும். நீண்டகாலமாக இடம்பெயர்வு அவலம் இன்னமும் மீள முடியாதவை 1990 ஆம் ஆண்டு தொடங்கின.

யாழ். கோட்டைப்படையினரை மீட்க - தீவகம், ஊர்காவற்துறை ஊடாக **1990 ஆம் ஆண்டு** சிங்களப் படைகள் மேற்கொண்ட 'திரிவிடபகர' படுகொலை, ஆக்கிரமிப்பு நடவடிக்கை 2 ஆம் ஈழப்போரின் முதல் இடப் பெயர்வை இரவோடு இரவாக ஏற்படுத்தியது.

இப்போதைய போர்நிறுத்த உடன்பாடே தீவகத்தில் மக்கள் ஓரளவு நிம்மதியான மீள் திரும்பலுக்கு வழிசெய்தது.

அதிக தடவைகள் இவர்கள் இடம்பெயர்வு அவலத்தை அனுபவித்தவர்கள். **1991 ஆம் ஆண்டு** பலாலித்தள விரிவாக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட 'ஜெயசக்தி', 'தொடர்ந்த கைகுலுக்கல்', 'பூமிய திர்ச்சி' என்பன வலிகாம மக்களைக் கட்டம் கட்டமாக இடம் பெயர்த்தியது.

அன்று இடம் பெயர்ந்த மக்கள் - அவர்களின் இடம் படை உயர் பாதுகாப்பு வலயங்களாக உள்ளதால், இன்னமும் தமது இடங்களுக்கு மீளமுடியாது உள்ளனர்.

**1995 ஆம் ஆண்டு** மேற்கொள்ளப்பட்ட 'முன்னேறிப்பாய்தல்' என்ற வலிகாமம் மேற்கு நடவடிக்கையால் 3 நாட்களில் பல நூறு மக்களின் உயிர்கள் கொடூரமாக பலியெடுக்கப்பட்டன.

2 லட்சம் வரையான மக்கள் இடம்பெயர்ந்தனர். 'புலிப்பாய்ச்சல்' மூலம் விடுதலைப்புலிகள் அதனை முறியடிக்க, குறுகிய இடைவெளியில் படைகளால் ஆரம்பிக்கப்பட்ட 'சூரியகதிர்' வரலாற்று முக்கியமான ஒக்ரோபர் 30 பாரிய இடம்பெயர்வு அவலத்தை உருவாக்கியது.

அது மானுடத்தை உலுக்கிய இடம்பெயர்வு படை ஆக்கிரமப்புத் தாக்குதல்களால் கொல்லப்பட்ட உறவுகளை அந்தந்த இடங்களிலே விட்டுவிட்டும் புதைத்துவிட்டும், இன்னொரன்ன துயரங்களை அனுபவித்த இடம்பெயர்வு அது. குடாநாட்டில் அன்றுடன் இடப்பெயர்வு முடியவல்லை.

சூரியகதிர் 2 இடப்பெயர்வு தொடர்ந்தது. 2000 ஆம் ஆண்டு வரை குடாநாட்டில் இடம்பெயர்வு அவலங்கள் தொடர்ந்தன.

போர் நிறுத்த உடன்பாட்டால் இடம்பெயர்ந்த அவலம் 19 மாதங்களாக இல்லை. அதேவேளை இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக தம்து இடங்களுக்கு மீளக் குடியேறப் படைகளும் விடவில்லை.

உலகில் நீண்டகால அதாவது - 2000 ஆம் ஆண்டு இடம் பெயர்வை அனுபவித்தார்கள் யூதர்கள்.

1948 ஆம் ஆண்டு இஸ்ரேல் என்ற தாயகம் உருவாகும் வரை- அவர்கள் உலகில் கொடுரமாக ஒடுக்கப்பட்டனர். பைபிள்கால பேரிடப் பெயர்வு ஒன்றே "எக்ஸோடஸ்" என்ற பாரிய இடப் பெயர்வுக்கான ஒரு அடையாளச் சொல்லாக மாறிவிட்டது.

ஒக்ரோபர் 30 - யாழ்ப் பாண இடப்பெயர்வினையும், யூதர்களின் "எக்ஸோடஸ்" என்ற பெயராலேயே மனிதாபிமானிகள் குறிப்பிடுகின்றனர்.

பிரபல பொனி எம் பாடல்க ளில் **Rivers Of Babylon** என்ற பைபிள் பாடலுள்ளது. தாயக மணணைவிட்டு இடம்பெயர்ந்த யூதர்கள் பபிலோன் நதிக்கரையில் இருந்து "எப்படிப் பாடுவோம் இறைவா உன்பாடலை எம் மண்ணைவிட்டு வந்து" என்ற பொருளில் அப் பாடல் அமைக்கிறது.

எம் மண்ணைவிட்டு தாய் மண்ணைவிட்டு, எம் தாய்நிலத்தை விட்டு, எம்பிறப்பிடத்தை விட்டு வந்து, இரவல் மண்ணிலிருந்து எப்படி மகிழ்வுறுவோம் நாம் என்று இடம்பெயர்ந்த, புலம் பெயர்ந்த எம்மக்களின் ஆன்மாக்கள் விசும்புகின்றன.

பொங்குதமிழின்.... எமது நிலம் எமக்கு வேண்டும், எமது நிலமே எமக்கு வேண்டும் என்றதன் உட்பொருள் இதுதான். எப்படி வாழுவர் மகிழ்வுடன் எம் மக்கள் தாய் மண்ணை விட்டு வந்து...

போதும் நாம் பட்ட அவலங்கள்... நாம் கண்ட இடப்பெயர்வுகளால் எத்தனை உறவை இழந்து, உயிரை இழந்து, பிறந்து தவழ்ந்து, மகிழ்ந்த சொந்த மண்ணைவிட்டு... ஊரை விட்டு... இனியும் இனியும் ஓடமுடியாது.

எமது நிலம் எமக்கு வேண்டும்... எம் மண்ணில் கால் பதித்து நிற்கும் ஆக்கிரமிப்புப்படை, எம் மண்ணை விட்டு வெளியேற வேண்டும்.

எம்மண்ணில் நாம் சுதந்திரமாய் கைவீசி நடக்கவேண்டும். எம் பிஞ்சுகள் ஓடிவிளையாட முற்றம் எமக்கு வேண்டும். மகிழ்வுடன்... சுதந்திரமாய் நாம் வாழ வேண்டும்.

**எமது நிலம் எமக்கு வேண்டும்...**

**எமது நிலம் எமக்கு வேண்டும்...**

# இஸ்ரேல் தலைநகரில் தற்கொலைத் தாக்குதல்

## நால்வர் பலி! பலர் காயம்!!



இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவிலுள்ள வர்த்தக நகரம்மீது நேற்று நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் குறைந்தது நால்வர் கொல்லப்பட்டதுடன் 12 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த தாக்குதல் டெல் அவிவிலுள்ள வர்த்தக நகரின் காமல் சந்தைப் பகுதியில் இடம்பெற்றதாகவும், தாக்குதல் நடத்தியவரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல் நடைபெற்ற இடத்திலிருந்து காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதனை இஸ்ரேலியத் தொலைக்காட்சி ஒளிபரப்பியது. தாக்குதல் நடைபெற்ற பகுதியில் இரண்டாவது தற்கொலைத்தாக்குதல் நடைபெறலாம் என்ற அச்சம் காரணமாக இந்தப் பகுதியைப் பொலிஸார் பொதுமக்களின் போக்குவரத்திற்குத் தடைசெய்துள்ளதுடன், அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் தாக்குதல் நடைபெற்றவேளை, தீ பரவியதாகவோ அல்லது காஸ் வெடிப்பு ஏற்பட்டதாகவோ நான் உணர்ந்தேன். ஆனால் நான் மீளப் பார்த்தபோதே ஒரு களஞ்சியம் முற்றிலுமாக அழிக்கப்பட்டதையும், மக்கள் சிதறியோடுவதைப் பார்த்தேன் என இந்தச் சம்பவம் நடைபெற்றவேளை அப்பகுதியில் நின்ற மோடி என்பவர் தெரிவித்தார்.

# மாவோயிஸ்டுகளின் தாக்குதலை நேபாள படையினர் முறியடித்தனர்



நேபாளத்தின் வடமேற்கு நகரான முகு பகுதியில் அரச படையினர்மீது மாவோயிஸ்ட் கிளிர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலை படையினர் முறியடித்துவிட்டதாக நேபாள அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஏற்பட்ட சேத விபரம் தொடர்பாகத் தெளிவான தகவல் எதுவும் வெளிவராதபோதிலும், பல அரச அலுவலகங்கள் இந்தத் தாக்குதலால் அழிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

நூற்றுக்கணக்கான மாவோயிஸ்டுகள் கில் மாவட்டத்தில் அமைந்துள்ள அரச படையினரின் அலுவலகத்திற்குள் புகுந்து தாக்குதலை நடத்தியதாகவும், இதன் பின் நடந்த சில மணிநேரத் தாக்குதலின் பின்னர் படையினர் இதனை முறியடித்ததாகவும் நோபாள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட மூன்று மாவோயிஸ்டுகளின் உடல்களைத் தாம் மீட்டுள்ளதாகவும், தமது தரப்பில் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லையெனவும் நேபாள படையினர் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகளிடமிருந்து எவ்வித தகவலும் வெளிவரவில்லை.

நேபாளப் படையினரும் மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகளும் நேபாளத்தில் இடம்பெற்ற மிகப்பெரிய இந்துப் பண்டிகையை முன்னிட்டு கடந்தவாரம் எட்டுநாள் போர்நிறுத்தமொன்றைச் செய்திருந்தனர்.

இந்தப் போர்நிறுத்தம் கடந்த வியாழக்கிழமை முடிவிற்கு வந்த பின்னர் அங்கு நடைபெற்ற முதலாவது தாக்குதல் சம்பவம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# கடத்தப்பட்ட மூவரையும் மீட்க முயற்சிகள் எடுக்கப்பட்டால் அவர்கள் கொல்லப்படுவர்!

## இஸ்லாமிய இராணுவம் எச்சரிக்கை



ஆப்கான் தலைநகர் காபூலில் வைத்துக் கடந்த வாரம் தம்மால் கடத்தப்பட்ட மூன்று ஐ.நா பணியாளர்களையும் மீட்பதற்கு ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்படுமானால், கடத்தப்பட்ட மூவரும் கொல்லப்படுவரென இவர்களைக் கடத்திய இஸ்லாமிய இராணுவம் எச்சரித்துள்ளது.

இதேவேளை இவர்களை விடுதலை செய்வதெனில் ஆப்கான் மற்றும் குவான்ரனமோ சிறைகளிலுள்ள கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டுமென, இந்த அமைப்பு நிபந்தனை விதித்துள்ளது. முரணான தகவலின்படி இவர்கள் மூவரையும் கொல்வதற்கான காலக்கெடுவை இவர்கள் நீடித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதவிடத்து இவர்கள் மூவரையும் கொல்லப்போவதாக இந்த அமைப்பு ஏற்கனவே அறிவித்திருந்தது. ஆப்கானில் நடைபெற்ற தேர்தலைக் கண்காணிப்பதற்காகச் சென்றிருந்தவேளையே பிரிட்டனைச் சேர்ந்த பிலிப்பீனோ அஞ்சலிற்றோ நாயன், அனற்றா பிளானிகன் மற்றும் கொசோவாவைச் சேர்ந்த கபீபி ஆகிய மூவரும் கடந்த வாரம் நலைநகர் காபூரில் வைத்து கடத்தப்பட்டனர்.

இவர்கள் கடத்தப்பட்ட பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அராபியத் தொலைக்காட்சியில் காட்டப்பட்டவேளை எவ்வித துன்புறுத்தல்களுக்கும் ஆளாகாமல் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மூவரையும் கடத்தியது யாரென்பதனை தம்மால் உறுதியாகக் கூற முடியாதிருப்பதாக ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அரியணை ஏறிய கம்போடிய மன்னர்



கம்போடிய மன்னர் நோராடம் ஷிகானுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தார். இதனால் அவர் தனது மன்னர் பதவியைத் துறந்துவிட்டார். இதையடுத்து, புதிய மன்னராக அவரது மகன் நோராடம்ஷாகணி முறைப்படி கடந்த 14 ஆம் திகதி தேர்ந்தெடுக்கப்பட்டார். நாம்பென் நகரில் மன்னர் மாளிகையில் நேற்றுமுன்தினம் முடிசூட்டு விழா நடைபெற்றது.

அரண்மனைத் தோட்டத்தில் நடந்த இந்த விழாவில் அரியணை ஏறிய மன்னரை ஊழியர்கள் பல்லக்கில் வைத்துச் சுமந்துவந்தனர்.

# ரஷ்ய விமானப்படை உயரதிகாரி துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு!

ரஷ்ய விமானப் படையின் உயர் அதிகாரியொருவர் காரில் சென்றுகொண்டிருந்தவேளை நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலலப்பட்டவர் ரஷ்ய விமானப படையின் உயர் அதிகாரியான மேஜர் ஜெனரல் கொன்ஸ்ரான்ரின் டெமன்ற்யேவ் என ரஷ்ய விமானப் படையின் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை கொல்லப்பட்ட உயரதிகாரி தனது விடுமுறையை முடித்துக்கொண்டு தலைநகர் மொஸ்கோவிற்கு, அக்கிபோவ்கா என்ற கிராமத்தினூடாகக் காரில் பயணம்செய்துகொண்டிருந்தவேளை, சிறிய ஆயுதங்கள் மூலம் இவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் உயரதிகாரியும், அவரது சாரதியும் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் படுகாயமடைந்தார். இவர் உடனடியாகவே வைதத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

கொல்லப்பட்ட மேஜர் ஜெனரல் கொன்ஸ்ரான்ரின் ரஷ்ய விமானப்படையின் நீண்டதூர தாக்குதல் பிரிவின் பிரதித் தலைமை அதிகாரியாவார். இநதத் தாக்குதல் நடத்தப்பட்டதற்கான காரணமெதுவும் தெரியவரவில்லையென தகவல்கள் தெரிவித்தன.

உலக நோக்கு





அமெரிக்காவில் இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தற்போதைய அதிபரும், குடியரசுக்கட்சி வேட்பாளருமான ஜோர்ஜ் புஷ் மற்றும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரி ஆகியோர் நேற்று தமது இறுதிக்கட்டப் பிரசாரத்தை மேற்கொள்வதைப் படத்தில் காணலாம்.

# காரில் சென்றுகொண்டிருந்த பாக்தாத் பிரதி ஆளுனர் சுட்டுக்கொல்லப்பட்டார்!



ஈராக் தலைநகர் பாக்தாத்தின் பிரதி ஆளுநர் தலைநகர் பாக்தாத்தில் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், இநதத் தாக்குதலில் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் இருவரும் படுகாயமடைந்தனர். கொல்லப்பட்டவர் கதீம் கமீல் அப்துல் பாத்தா என ஈராக் உள்துறை அமைச்சுப் பேசசாளர் தெரிவித்தார்.

தலைநகர் பாக்தாத்தின் தென்பகுதி டூரா மாவட்டத்தில் இவர் தனது மெய்ப்பாதுகாவலருடன் சென்றுகொண்டிருந்தபோதே, இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அடுத்தவருடம் ஜனவரியில் ஈராக்கில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அதற்காக வாக்காளர்களைப் பதிவு செய்யும் நேரம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் ஈராக்கின் உயர் அதிகாரி ஒருவர் தலைநகரில் சுட்டுகொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நடைபெறவுள்ள தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களை 550 இடங்களில் வைத்துப் பதிவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. அத்துடன் நிவாரணம் வழங்கும் இடங்களில் வாக்காளர் பதிவுகளை மேற்கொள்வதனால் மக்கள் எவ்வித அச்சமுமின்றிப் பதிவினை மேற்கொள்வதுடன், தாக்குதல் இலக்குகளையும் குறைத்துக்கொள்ளலாமெனக் கருதி அவ்வாறான ஏற்பாடுகளை ஈராக் அதிகாரிகள் செய்துவருவதாக பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

ஆனாலும், ஈராக்கில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுபவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுமென மீண்டும் இஸ்லாமியக கிளர்ச்சிவாதிகள் அச்சுறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, திக்றிற் நகரம் மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட றொக்கட் தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டதுடன் எட்டுப்பேர் காயமடைந்தனர்.

திக்றிற் நகரிலுள்ள அமெரிக்க இராணுவ முகாமை இலக்குவைத்துக் கிளர்ச்சிவாதிகள் இரண்டு றொக்கட் தாக்குதலை நடத்தியதாகவும், அதிலொன்று தவறி அருகிலுள்ள ஹோட்டலில் பணிபுரியும் பணியாளர்கள் தங்கியிருக்கும் வீட்டின்மீது விழுந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

இவற்றுடன் பாக்தாத்தின் மேற்குப்பகுதி றமாடி நகர்ப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வன்செயல்களில் குறைந்தது ஏழு ஈராக்கியப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதேவேளை, அழிவுகளைச் சந்தித்துவரும் பலூஜாவில் சமாதானத்தை நிலைநிறுத்தப் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கான காலம் கடந்துசெல்வதாகவும், அங்கு மீள ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனில் அதனைச் செய்வதற்கும் தான் தயாராக இருப்பதாக ஈராக் பிரதமர் இயட் அலாவி - பலூஜா நகரில் கிளர்ச்சிவாதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின் தெரிவித்தார்.

பலூஜா நகரில் அமெரிக்கப் படையினர் தொடர்ந்தும் குண்டுவீச்சு நடத்திவருவதாகவும், அத்துடன் அந்தப் பகுதியில் பாரிய தாக்குதலுக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபட்டுவருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தென்பகுதி பஸ்ரா நகரிலுள்ள பிரிட்டன் படையினரின் முகாமில் பிரிட்டன் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். இவர் போரின்போது உயிரிழந்திருக்கவில்லையென பிரிட்டன் தெரிவித்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜனாதிபதிக்கு எதிராக முஸ்லிம்கள் போராடுவதற்கு முன்வரவேண்டும்!

## ஹக்கீம் அறைகூவல்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா முஸ்லிம் சமூகத்துக்கு பாரிய துரோகமிழைத்துவருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர் மாநாட்டை கூட்டிய அவர், ஜனாதிபதி சந்திரிகா ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூவருக்கு அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சுப் பொறுப்புக்களை வழங்கியதன் மூலம் முஸ்லிம்களின் தேசிய அரசியலைச் சிதைத்து வருகிறார்.

ஜனாதிபதியின் அரசியலமைப்பு திருத்த நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு வழங்குவதாக உறுதியளித்ததன் அடிப்படையிலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூவருக்கு ஜனாதிபதியினால் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுப் பொறுப்புவழங்கப்பட்டுள்ளது. இதனை ஜனாதிபதியின் செயலாளரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

எனவே அனைத்து முஸ்லிம் மக்களும் ஜனாதிபதியின் இந்தச் செயலுக்கு எதிராகப் போராட முன்வர வேண்டும். ஜனாதிபதிக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இனிமேல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கமாட்டாது.

சர்வஜன வாக்கெடுப்பு உட்பட எந்தவொரு நகர்வை ஜனாதிபதி மேற்கொண்டாலும் அதற்கு எதிராக நாட்டிலுள்ள ஐந்து இலட்சம் முஸ்லிம்களையும் செயற்பட வைக்கப்போவதுடன் - அதற்காக கிராமம் கிராமமாக சென்று விளக்கமளிக்கப் போகிறேன்.

மறைந்த அமைச்சர் அஷ்ரப் 50 பக்க அறிக்கை ஒன்றை கையளித்த பின்னரே உலங்கு வானூர்தியில் புறப்பட்டு சென்றார். அவர் ஏற்கனவே 16 பக்க அறிக்கை ஒன்றையும் ஜனாதிபதியிடம் கையளித்தார். இந்த நிலையில் ஜனாதிபதி முடியுமானால் அந்த அறிக்கைகளை வெளியிட முன்வரவேண்டும்.

அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ள மூன்றுபேரும் சமாதானப் பேச்சுவார்தைகளில் முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாகப் பங்குகொள்ள ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கின்ற போதும் ஜனாதிபதி மூன்றாம் தரப்புக்கு இடமில்லை என தெரிவித்து வழங்கிய ஆவணம் என்னிடம் இருக்கிறது.

ஜனாதிபதியின் இவ்வாறான நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாக சிறுபான்மை மக்களுக்கு எதிரான செயற்பாடுகளாக் கருதப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சமாதானப் பேச்சுக்களில்

# முஸ்லிம்களை தனித்தரப்பாக அங்கீகரிக்க முடியாதாம்!

## ஹக்கீமுக்கு சந்திரிகா அறிவிப்பு

சமாதானப் பேச்சுக்களின் போது முஸ்லிம்களைத் தனித்தரப்பாக அனுமதிப்பதில் எவ்வளவுதான் நியாயமிருந்தாலும்கூட அதைத் தன்னால் அனுமதிக்க முடியாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அந்தக் கடிதத்தில் ஜனாதிபதி மேலும் தெரிவித்திருப்பதாவது -

தனித்தரப்பு அங்கீகாரம் வழங்குவதில் சிக்கல்கள் இருக்கின்றன. இது சம்பந்தமாக மாற்றுத் தீர்வு ஒன்றை நாங்கள் ஆலோசிக்க வேண்டும்.

அதேநேரம் இந்த விடயத்தை தேசிய ஆலோசனைச் சபையின் நிகழ்ச்சி நிரலில் போடவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# நகைப்புக்கிடமானது...

நிலைமைகள் பற்றியும், சமாதானப் பேச்சுக்களை விரைவாக முன்னெடுப்பதற்கு விரைவில் ஒரு இடைக் காலத்தீர்வு ஏற்படுத்தப்படவேண்டும் என்பதன் முக்கியத்துவத்தையும் நாங்கள் தெளிவாக விளக்கியிருக்கிறோம்.

ஏனெனில் பேச்சுக்கள் ஆரம்பித்து இரண்டரை வருடங்கள் கழிந்த நிலையிலும் இந்த சமாதானச் சூழல்கள் எமது மக்களுக்கு எந்தவித நன்மையையும் அளிக்கவில்லை என்பதையும் எங்களுடைய மக்கள் முற்றாக நம்பிக்கையிழந்த நிலையில் உள்ளார்கள் என்பதையும் தெளிவாக விளக்கியிருக்கிறோம்.

எங்களுடைய கருத்துக்களைப் புரிந்து கொண்டு, எமது நிலைப்பாடுகளை அவர்களும் ஏற்றுக்கொணட தன்மையை அவதானிக்க முடிந்தது.

அந்த வகையில் இன்றைய சந்திப்பு ஆக்கபூர்வமானதாக இருந்தது. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு, குறிப்பாக விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பித்து, அதற்குத் தீர்வுகண்டு நடைமுறைக்கு வந்த பின்னர், இறுதித்தீர்வு சம்பந்தமான பேச்சுக்களை தொடங்கலாம் என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டுக்கு தெற்கில்கூட எதிர்க்கட்சிகள் உட்பட பல கட்சிகள் தமது ஆதரவைத் தெரிவித்திருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தை அரசாங்கம் பயன்படுத்தி, சரியான சூழலை உருவாக்கிக் கொள்ளவேண்டுமென்பதை நாங்கள் அவர்களுக்கு எடுத்துக்கூறியிருக்கின்றோம்.

கட்டுமானங்கள் அனைத்தும் சிதைக்கப்பட்ட நிலையில், மனிதாபிமான நெருக்கடிகளைச் சந்தித்திருக்கும் மக்களுக்கு அவசரமான மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளவேண்டிய கடப்பாடு விடுதலைப் புலிகளுக்கு இருக்கிறது. விடுதலைப் புலிகள் அமைப்பால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்களுக்கு ஜப்பான் அரசு நேரடியாக உதவிவழங்கவேண்டும் என்பதையும் நாங்கள் அவர்களுக்கு வலியுறுத்தியிருக்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரையில் ஜப்பான் தூதுவர் - அரசாங்கத்தின் ஆக்கபூர்வமான செய்தி எதனையும் கொண்டுவரவில்லை. வழமையாகவே சந்திரிகா அம்மையாரும் அவரது அரசும் தெரியப்படுத்துகின்ற அதே கருத்தைத்தான் அவர் கொண்டுவந்திருந்தார்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த காலத்திலிருந்து பேச்சுவார்த்தைக்கு தாங்கள் ஆயத்தமாக இருப்பதாகவும் பேச்சுவாாத்தை தொடங்கப்படவேண்டுமென்ற நிலைப்பாடுகளை அறிக்கையாக விடுத்துக்கொண்டிருக்கிறதே தவிர அனுசரணையாளர்கள் ஊடாக நேரடியாகப் பேச்சுவார்த்தைக்கு வருவதற்கு அல்லது பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான ஆக்கபூர்வமான முடிவுகளை எடுத்து நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. இந்தக் கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் வைத்துக்கொண்டு நாங்கள் ஒரு முன்னேற்றம் என்று கூறமுடியாது.

அரசுக்கும் புலிகளுக்கும் சமபல நிலையில்தான் யுத்தநிறுத்த ஒப்பந்தமும் பேச்சுவார்த்தைக்கான சூழலும் உருவானது. இந்த வலுச் சமநிலை சீர்குலைக்கப்படுமாக இருந்தால், அது சமாதான முன்னெடுப்புகளுக்கும் அமைதி முயற்சிகளுக்கும் நிச்சயமாக ஒரு நெருக்கடி நிலையைத் தோற்றுவிக்கும்.

இந்தியாவின் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி நாங்கள் இப்பொழுது அதிகாரபூர்வமாகக் கூறமுடியாது. ஆனால், உண்மையாக இருந்தால் எமது மக்களோ தமிழீழ விடுதலைப் புலிகளோ நிச்சயமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். பக்கச்சார்பான நடவடிக்கையாகத்தான் அது பார்க்கப்படும்.

ஏனெனில் இப்பொழுது சமாதான முன்னெடுப்புக்கள் எடுக்கப்படுகின்ற சூழலில் படைததரப்புக்கு இராணுவ ரீதியிலான உதவிகளைக் கொடுப்பதென்பது படைவலுச் சமநிலையை சீர்குலைக்கும் நடவடிக்கையாகவே கருதப்படும்.

ஒவ்வொரு காலகட்டத்திலுமே தமிழ்மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுகின்ற முயற்சிகள் முடக்கப்படும்போது தெற்கிலே சமாதானத்துக்கு விரோதமான சக்திகள் எப்பொழுதுமே சமாதான விரோத நடவடிக்கைகளை கடந்த காலங்களில் முன்னெடுத்திருக்கிறார்கள்.

இப்பொழுது சமாதான முன்னெடுப்புக்களை அரசாங்கம் இழுத்தடித்து வருகின்ற சூழலில் இன்னும் அவர்களுககான சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களும் அதிகரித்த நிலையில் அவர்களுடைய செயற்பாடுகள் தீவிரமடைந்திருக்கின்றன.

எங்களைப் பொறுத்தவரையில் அரசாங்கமும் ஜனாதிபதியும் ஒரு அர்ப்பணிப்போடு உண்மையான நோக்கத்தோடு ஈடுபாட்டோடு பேச்சுவார்த்தைக்கு வந்து இதற்குத் தீர்வு காண வேண்டும் என்ற உறுதிப்பாட்டை எடுத்தால் நிச்சயமாக பேச்சுவார்தை முயற்சிகளை முனனேற்றமாகக் கொண்டுசெல்லலாம். இது ஜனாதி பதியினதும் அரசினதும் கைகளில் தான் இருக்கிறது.

பேச்சுவார்த்தை மேசையில் விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி வரைபையும் அரசாங்கம் தயாரித்த வரைபையும் ஆராயலாம் என்று கூறப்படுகிறது. ஆனால், பேச்சுவார்த்தை மேசையில் இரண்டு திட்டங்களை வைத்து ஆராய்ந்தால் ஒரு முடிவுக்கு வரமுடியாது. இதுதான் யதார்த்தம். சமாதான முயற்சிகளை முன்னெடுப்பவர்களுக்கு ஒரு நகைப்பிடமாகத்தான் இது இருக்கும் எனத் தெரிவித்தார்.

# புலிகளைச் சந்திக்க முரளிதரன் விருப்பம்!



(யாழ்ப்பாணம்)

உலக உணவுத் திட்டத்தின் விசேட பிரதிநிதியான இலங்கை கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

அவர் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் - அரசியல் கட்சி எதனையும் சாராத நிலையிலேயே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வந்தேன். சமாதான சூழ்நிலையில் அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழ்கின்ற சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

கிளிநொச்சியில் 5 மில்லியன் செலவில் கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைக்கவும், யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சிறிய கிரிக்கெட் மைதானங்களை அமைக்கவும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அனுமதி கோரியுள்ளது.

இதன்மூலம் தமிழ் மக்கள் மத்தியில் கிரிக்கெட்டை பிரசித்தியடையவைக்க முடியும்.

இன்று பூநகரிப் பகுதிக்கு செல்லவுள்ள நான் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை சந்திக்க விருப்பம் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

UNIT

இந்தியாவில் கணனிப் பொறியியல் துறைப் பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு தசாப்த காலமாக கணனியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் இந்நிறுவனத்தை நிறுவியுள்ளோம். கணனி துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி உதிரிப்பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவையுடன் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு 3வருட முழு உத்தரவாதத்துடன் வழங்குகின்றோம்.

Attractive Opening Offer each computer purchase has
★ Computer Table
★ Filter ★ Dust Cover ★ Mouse Pad & etc.

எல்லாமே Hybrid Boost, Hypher Thread, Dual Monitor வசதிகளுடன்

இவையெல்லாம் இலவச வீட்டில் சேர்த்தல் மற்றும் வீட்டிலேயே பராமரிப்புடன் கூடியவை

We are entirely different from others

எமது சேவைகள் பல அவற்றுள் சில :

விற்பனை

- உலகத்தரம் வாய்ந்த பிரத்தியேக உதிரிப்பாகங்களை தெரிவு செய்து இணைத்து முழுக் கணனியாகவும் மற்றும் உதிரிகளாகவும் வழங்குதல்.
- கணனி தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களான Compaq, DELL, IBM மற்றும் HP நிறுவனங்களில் தயாரிப்புக்களை மிகமிகக் குறைந்த விலையில் தரம் மாறாமல் வழங்குதல்.
- உலகத்தரம் மற்றும் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களான Perx & Asrock தயாரிப்புக்களின் ஏக விநியோகம்
- வலைப்பின்னலமைப்பில் முன்னணி நிறுவனமான Cisco தயாரிப்புகள் மற்றும்

3 வருட முழு உத்தரவாதம்

விசேட சலுகைப் பொதிகள்

புதிய Multimedia Pentium IV கணனிகள் Rs. 40,000/= முதல்
மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
புதிய Multimedia Compaq Pentium III கணனிகள் Rs. 25,000/= முதல்
ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
புதிய Multimedia Compaq Pentium II கணனிகள் Rs. 13,000/= முதல்
ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
நிபந்தனைக்குட்பட்டது. இச்சலுகை 3, 4 & 5 திகதிகள் மட்டுமே

Universal Network of Information Technology
347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இலவச சிறப்பிதழ் - 02.11.2004

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



# அறிவியல் – விஞ்ஞான – தொழில்நுட்பத்தின் மேன்மையையும் வளர்ச்சியையும் விளக்கும் கண்காட்சி

கடந்த 26.10.2004 இல் ஆரம்பித்து நடைபெற்றுவரும் விஞ்ஞானக் கண்காட்சியை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினர் நிர்வகித்திருப்பது, கல்வி சார்ந்தோருக்குரிய பெரும் பேறாகவே கருதலாம்.

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" என்ற பழமொழியை நாம் நன்கறிந்திருந்தும், அந்த நிலையிலேயே எமது கல்வியைத் தொடர்வது பேதமையான செயலாகும். இன்று எமது வாழ்வியல் என்பது பல மாற்றங்களைக் கண்டிருக்கின்றது. மனித இனம் பெருகப் பெருக ஏற்படும் நெருக்கடிகள் தீர்க்கப்பட வேண்டியனவாகவே உள்ளன.



எனவே, சிக்கல்தரும் விடயங்களைத் தீர்ப்பது எப்படி? அதற்கான இலகு வழிகள் உள்ளனவா? என ஆராயப் புகுந்தால், விஞ்ஞான அடிப்படைக் கருத்துக்களே அதற்குப் பதிலிறுக்கக் கூடியவையாக உள்ளன.

மேற்குலக நாடுகள் இன்று உலகமே அதிசயிக்கக்கூடிய விஞ்ஞான விந்தைகளைப் புரிந்து கொண்டிருக்க, அவர்களெல்லாம் எங்களுடைய மூதாதையர்களின் ஏட்டுப் பிரதிகளைப் பின்பற்றியே இவற்றையெல்லாம் செய்கிறார்களென்று வீணான வாதப் பிரதிவாதங்கள் செய்வதே எமது பிரச்சாரமாகவும், பெருமைத்தனமாகவும் இருப்பதைப் பார்த்து, எம்முள்ளே நாம் வேதனைப் படவேண்டியவர்களாக உள்ளோம்.

இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்ததைப் போலவே, யாழ்.மண்ணில் இந்தக் கண்காட்சிப் பெருவிருந்தொன்றை அறிவுப் பசியோடிருக்கும் மாணவ சமுதாயத்துக்கு அளித்துள்ளது யாழ்.பல்கலைக்கழகம். இதை நன்கு புரிந்து கொள்வதிலும், இதை ஆதார சுருதியாக ஏற்றுக் கொள்வதிலுமே எதிர்கால சந்ததி பெருமையடையக்கூடியதும், புகழ் பெறக்கூடியதுமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

ஒவ்வொரு நிறுவனங்களினுள்ளும் நிர்வாகச் சிக்கல்கள் என்பது ஏற்படுவ தானதே. எனினும், அவற்றையெல்லாம் தீர்த்துக்கொண்டோ அல்லது ஒரு புறத்தேவைத்துவிட்டோ தத்தமது இலட்சிய நோக்கை உரிய வழியில் வழி நடத்துவதே பெருமைக்குரியது. அந்தவகையில், இன்று யாழ்.பல்கலைக் கழகத்தின் இலட்சிய வெளிப்பாடாக இந்த விஞ்ஞானக் கண்காட்சி திகழ்கிறது.

இந்தக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக கல்விச் சமூகத்தைச் சார்ந்த பெருந்தொகையானோர் இங்கு வருகை தருகின்றனர். கண்காட்சியின்போது, கணகாட்சிக்காக வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு வெளிப்பாடுகளுக்கும் பொறுப் பானவர்கள் அது சார்ந்த விளக்கங்களை முழுமையாக அளித்து வருகின்றனர்.

இன்று அரசியல்ரீதியாக பின்னோக்கியே தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் எமது மக்கள், அரசினால் திட்டமிடப்படும் சதிச் செயல்களுள் அழிந்து போகாதிருக்கவும், எதனையும் எதிர்கொள்ளும் வகையில் அறிவு ரீதியாகத் தயாராகவும், உறுதியாகவும் இருக்க வேண்டியவர்களாக உள்ளனர். அவர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்குள், கல்வியும் மிக முக்கியமானது. இன்று சாதாரணமாக, உயர்தர பாடசாலைகளில்கூட மாணவர்களுக்கான விஞ்ஞான, ஆய்வுகூட உபகரணங்கள் என்பன உரிய அளவில் இல்லையென்றே கூறலாம்.

இந்தநிலையில் மாணவர்களின் கல்வி ஏட்டுச் சுரைக்காய் இல்லாமல் வேறெப்படி இருக்கமுடியும்? எனவே இத்தகைய இல்லாமைகள் எமக்கு இல்லை என்று ஆக்கும்படியாக இந்தக் கண்காட்சி அமைந்துள்ளது எனின் அது மிகையாகாது.

இந்தக் கண்காட்சி தொடர்பாக சில விடயங்கள் குறிப்பிட்டுச் செல்லக்கூடியனவாக இருக்கின்றன.

i. மனிதன் குரங்கிலிருந்து பிறந்தான் என்று சொல்கிறோமே தவிர, அதற்கான ஆதாரங்களை எத்தனைபேர் அறிந்திருக்கிறோம். ஆனால், மனிதன் மிருகத்திலிருந்து கூர்ப்பெய்திய படிமுறைகள் இங்கு மாதிரிகளுடன் காட்டியிருந்தமை சிறப்பானதே.

ii. மக்களின் அன்றாட வாழ்க்கையில் பயிர்ச்செய்கை மிக முக்கியமானதே. ஆனால் பயிர்களை அழிக்கின்ற நுண்ணங்கிகளை எதிரானதாகக் கொள்கின்ற நிலையை மாற்றி அவற்றின் மூலமும் நாம் பயன்பெற முடியும் என்பதைத் தாவரவியல் துறையினர் மெய்ப்பித்திருந்தனர். இதன் மூலம் பயிர்ச்செய்கையாளர்கள் பயன்பெறமுடியுமென்ற நம்பிக்கையுண்டு.

iii. இரசாயனவியல்துறை மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எண்ணெய் சுத்திகரிப்பு சம்பந்தமான செயன்முறை வெளிப்பாடு பல மாணவர் களை அதிசயத்தில் ஆழ்த்தியருக்கும். ஏனெனில் மசகு எண்ணெயிலிருந்தா பெற்றோல், டீசல், மண்ணெய் என்பன பெறப்ப டுகிறதென்று இன்றும படித்துப் பட்டம் பெற்ற வர்கள் கூடத் தெளிவிலலாமல் இருககையில் - அறிந்திருக் காதிருக்கையில் இது மாண வர் களைப் பொறுத்தவரை ஒரு சிறப்பான செயன் முறை என்றே கூறலாம்.



iv. பௌதீகவியல்துறை மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்த, மின்னியல் சாதனங்கள், மின்னினால் ஏற்படும் விபத்துக்களைத் தடைசெய்யும் கருவிகள் என்பன மிகவும் நேர்த்தியான முறையில் மக்களுக்கு விளங்கக் கூடியனவாக அமைந்திருந்தன. இன்று எமது வாழ்வியலில் 3/4 பங்கு வீதத்தை மின்சாரமே அணைத்து வைத்துக் கொண்டுள்ள வேளையில்- மின் விளக்குகளையோ, மின் கருவிகளையோ போடவும், அணைக்கவும் மாத்திரமே நம்மில் பலர் தெரிந்து கொண்டுள்ளோம். எனவே, எவரும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடியதாக இந்த விடய்ம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது சிறப்பானதாகும்.

v. இன்று கணினியின் பங்கு முக்கியமானது. கணினி பற்றிய விளக்கங்கள் இன்று அநேகருக்குச் சிதம்பர சக்கரமாகவே உள்ளது. கணினிகளின் வேகமும், விந்தைச் செயல்களும் விபரிக்க முடியாதவை என்றே சொல்லவேண்டும். அதனோடு செய்திப் பரிமாற்றங்கள் வாயுவைவிட வேகமாகச் செல்லுகின்ற வகையில் இணைய வலையமைப்புத் தொடர்பான (இன்ரநெற்) விளக்க முறைகள் மாணவர்கள் மத்தியில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்றே நம்பலாம். இது விஞ்ஞானத்துறை மாணவர்களால் ஆக்கப்பட்டிருந்தது குறிப்பிடக்கூடியது.

vi. இன்றையநிலையில், சுற்றிவரக் கடலால் நிறைந்துள்ள குடாநாட்டு மக்கள் கடல் வளத்தை உரிய விதத்தில் பெறமுடியாதவாறு அரச நெருக்குவாரங்கள், பாதுகாப்பு என்ற போர்வையிலான மறைமுக நடவடிக்கைகள் என்பன தடைபோட்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்தவகையில், கடல் உணவுப் பொருளான இறால் வளர்ப்புக்கான செயன்முறையையும், அதற்கான விளக்கங்களையும் மீன்பிடியியல்துறை மாணவர்கள் மிகவும் திறமையாக வெளிக்காட்டிருந்தனர். இந்தரீதியில், இந்த விஞ்ஞானக் கண்காட்சி- மாணவர்கள் மத்தியில் புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்துவதுடன் பல்கலைக்கழக மாணவர்களின் ஒட்டுமொத்தத் திறமைகளையும் வெளிக்கொணர்ந்த செயற்பீடமாகவும் மிளிர்ந்ததெனில் மிகையாகாது.

# துணைவேந்தர் - பீடாதிபதி - துறைத்தலைவர்கள் கருத்து



**பேராசிரியர் மோகனதாஸ்**
**துணைவேந்தர்**
**யாழ். பல்கலைக்கழகம்**

நாம் இந்த கண்காட்சியை ஒழுங்கமைத்து இருப்பதற்கான நோக்கங்களாக க.பொ.த. சாதாரண தர மாணவர்கள், உயர்தர மாணவர்கள் விஞ்ஞான அறிவை வளர்க்கும் நோக்குடனும், பொது மக்கள் விஞ்ஞான அறிவைப் பெற விரும்புவோருக்கு செயல்முறைகளை காண்பிப்பதே எமது முக்கிய நோக்கம்.

இவ்வாறான கண்காட்சியை நடத்துவது பல்கலைக்கழகத்தின் ஒரு கடமையாகக் காணப்படுகின்ற துடன், பல்கலைக்கழக சமூக தொடர்பை அதிகரிக்கவும் செய்கின்றது. எமது கண்காட்சியை இனி வரும் காலங்களில் இதைவிடச் சிறப்பாகவும் செயற்படுத்தவுள்ளோம். இந்த கண்காட்சி பல்கலைக்கழகம் சமூக நலனை எவ்வாறு பேணுகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. ஆய்வுகூட வசதிகள் அற்ற மாணவர்கள் இந்தக் கண்காட்சியைப் பார்த்து வியப்படைவதாகத் தெரியவருகின்றது. இந்த விடயம் எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. எமது கலை, பண்பாடு, கலாசாரம் என்பன பேணிப்பாதுகாக்க வேண்டிய ஒன்று இந்தப் பொறுப்பு யாழ்.பல்கலைக்கழகத்திற்கு உண்டு.

இந்த கண்காட்சி சிறப்புற நடைபெற உதவிய பீடாதிபதிகள், பேராசிரியர் துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், சிரேஸ்ட மாணவர்கள் , மாணவர்கள், ஊழியர்களைப் பாராட்டுகின்றேன்.

---



**பேராசிரியர் இ.குமாரவடிவேல்**
**விஞ்ஞான பீடாதிபதி**
**யாழ்.பல்கலைக்கழகம்**

மற்றைய மாவட்டங்களை விட யாழ்ப்பாண மாவட்டத்தில் வசதிகள் குறைவாக இருக்கின்றன. இந்த விஞ்ஞான கல்விக்கு கட்டாயம் ஆய்வு கூடத்திலே அவர்கள் படிப்பதை நேரடியாக செய்து கண்ணால் கண்டால்தான் கூடுதலான விளக்கத்தைப் பெறக்கூடியதாக இருக்கிறது. ஆகவே எங்களுடைய உயர்தர, சாதாரண விஞ்ஞானம் படிக்கின்ற மாணவர்களுக்கு எந்தமாதிரியாக வகுப்புக்களில் படிப்பதை என்னவிதமாக நடைமுறையிலே எப்படி நிறுவலாம். அதனுடைய உபயோகம் என்ன? அதைப்பற்றிக் கண்டுகொள்ள வசதியாக இருக்கும்.

அதேநேரத்தில சாதாரண பொதுமக்களையும் பொறுத்தவரையில் விஞ்ஞான ஆய்வு கூடத்தில் என்ன நடக்கிறது என்று அறிந்துகொண்டு ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் அதை எவ்விதமாக உபயோகித்து மற்றவர்களுக்குக் கவரக்கூடிய முறையில் அறிமுகப்படுத்தலாம் செய்து காட்டலாம் நாங்கள் செய்வதை மற்றவர்களுக்குச் செய்து காட்டலாம் போன்றவற்றுக்கு இது களம் அமைத்துக் கொடுக்கின்றது.

---



**மீனா செந்தில்நந்தனன்**
**யாழ்.பல்கலைக்கழகம்**
**தலைவர் - இரசாயனத்துறை**

எமது பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்ட கண்காட்சியில் இரசாயனவியற்துறை - அசேதன இரசாயனம், சேதன இரசாயனம், பௌதீக இரசாயனம், கைத்தொழில் இரசாயனம் எனும் பகுதிகளைக் கொண்டு அமைந்தது. அசேதன இரசாயனமானது - க.பொ.த சாதாரணதர, உயர்தர பாடத்திட்டங்களை உள்ளடக்கக்கூடியதாக இருக்கின்றது.

பொதுமக்களுக்கு சேதன இரசாயனப் பகுதிகளை விட, அவர்களுக்கு பிரயோசனமாக இருப்பது கைத்தொழில் இரசாயனமும், சூழல் இரசாயனமும். யாழ்ப்பாண தீபகற்பத்தில் 10, 15 வருடகாலமாக உவர்நீர்த் தன்மையும், நைத்திரேற்றின் அளவும் அதிகரித்துள்ளது. இதற்கான காரணங்களை இந்தக் கண்காட்சிமூலம் விளங்கப் படுத்தியுள்ளோம்.

இந்தத் துறை மாணவர்களின் கல்விக்கு மட்டுமல்லாது, சாதாரண மக்களின் விஞ்ஞான அறிவையும், கைத்தொழில் ஆர்வத்தையும் கூட்டும் என்பது திண்ணம்.

---



**கலாநிதி லோ.ஜெயநாதன்**
**பௌதீகவியற்துறை**
**தலைவர்.**

நாம் எமது கண்காட்சியை இரண்டு வகையாக வகைப்படுத்தியுள்ளோம். இதில் ஒன்று பாடசாலை மாணவர்களின் பாடத் திட்டத்திற்கு அவர்களின் கற்றல், செயற்பாட்டிற்கு அமையஅமைக் கப்பட்டுள்ளது. மற்றையது சாதார ணமாக விஞ்ஞானத்தை பொது மக்களுக்கு அறிவை - தகவலை - வழங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு அமைக்கப்பட்ட கண்காட்சிகளில் ஒரு பகுதி க.பொ.தஉயர் தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பௌதிக பாடத்திட்டச் செயல்முறைக்கு ஏற்ப சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. எமது பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி களைப் பார்வையிடுவதற்கு உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் முண்டியடித்துக் கொண்டிருப்பதைக் காண முடிந்தது. விஞ்ஞானத்தை அறிய விரும்புவோர் என்ற வகையில் அவர்களுக்கு அமைக்கப்பட்டதில் சிறப்பான பகுதியான இலத்திரனியல் பகுதி அமைந்துள்ளது. எமது கண்காட்சிகள் பெரும் பாலானவை செயல் முறையினை அடிப்படையாகக் கொண்டமைந்துளளது.

இதைவிட பௌதீகவியல் முக்கிய பிரிவுகளான பொறியியல், அலை களும் அதிர்வுகளும், ஒளியியலும், வெப்பவியலும், மின்னியலும் காந்தவியலும், நவீன பௌதீகவியல், வான பௌதீயவியல் என்பன அடங்குகின்றன. இந்தக் கண்காட்சி இவ்வாறான சிறப்பாக அமைய மாணவர்களின் உழைப்புத் தான் காரணம்.

---



**கா. சித்திரவடிவேல்.**
**பணிப்பாளர்,**
**கடல்வள அபிவிருத்தி நிலையம்**

மீன்பிடி தொடர்பாக மக்களுக்குப் போதிய அறிவை புகட்டவேண்டும் என்பதே எமது இந்தக் கண்காட்சியின் நோக்கம். மிகக் குறைந்த வசதிகளைக் கொண்டு, சிறப்பாக நாம் கண்காட்சி யொன்றை மேற்கொண்டிருக்கிறோம்.

நாம் பல்கலைக்கழகத்தில் முதற்தடவையாகவே இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்து இருக்கின் றோம். எமது கண்காட்சியில் சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாகவும், மீன்பிடிக்குப் பயன்படும் இயந்திரங்கள், இறால் வளர்ப்பு முருகைக் கற்பாறைகள் அகற்றப்படுவது, இதனைப் பாதுகாக்க வேண்டிய முறை, அலங்கார மீன்வளர்ப்பு, இலங்கையில் இந்திய மீனவர் பிணக்கு, உயர்பாதுகாப்பு வலயம் மூலம் வளங்களின் உற்பத்தி குறைவுடைவது என்பன விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இனிவரும் காலங்களில் நாம் எமது இவ்வாறான மீன்பிடி தொடர்பான கண்காட்சிகளை சிறப்பாக மேற்கொள்ள இருக்கின்றோம். எமது கண்காட்சி மூலம் மீனவர்கள், மீனவக் குடும்பங்கள் பயனடைவார்கள்.

---

**கலாநிதி சின்னத்தம்பி மகேசன்**
**தலைவர்,**
**கணினி விஞ்ஞானத்துறை.**

கணினி உலகமும், அதன் பிரயோகங்களும் இந்தக் கண்காட்சியின் பிரதான நோக்கங்களாக உயர்தர மாணவர்களுக்கு அறிவு புகட்டல், எமது மாணவர்களை அனுபவத்தினூடு புதிய விடயங்களைக் கற்கத் தூண்டல், பொது மக்களுக்கு விஞ்ஞான விழிப்புணர்வை உண்டாக்கல் போன்றவை அமைந்துள்ளன. மேலும் கணினி அறிவின்றி, எமது நாளாந்த கருமங்களையே செய்ய முடியாதளவுக்கு கணினியின் பிரயோகம் இன்று வியாபித்துள்ளது. இதன் அடிப்படையில் நாம் கணினி விஞ்ஞானத்துறையின் காட்சிப் பகுதிகளை பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளோம்.

1. கணினிக் கணிமம் - இதில் க.பொ.த (உ/த) இரசாயனவியல், பௌதிகவியல், கணிதம் போன்ற பாட அலகுகளை இலகுவான முறையில் ஆசிரியர்கள் கற்பிப்பதற்கும், மாணவர்கள் கற்பதற்கும் பல பிரயோக செயலொழுங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் A.T.M இல் நடைபெறும் மாயத்தையும், செயற்கை நுண்ணறிவுப் பிரயோகங்களைக் கொண்டு புதிர்களைக் கணினி எவ்வாறு தீர்க்கிறது என்பதையும், ரோமன் இலக்கக் கணியியையும், மாணவர் தேர்ச்சி அறிக்கை தயாரித்தல், Z-Score கணித்தல், எண்களை வரிசைப்படுத்தும் பல்வேறுபட்ட நுட்பங்களையும் இங்கு காணலாம். இவற்றுடன், உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கத்தில் (அல்லது பிறந்த திகதியில்) இருந்து உங்கள் குணநலன்களை கணினி தமிழில் தருகிறது.

2. கணினிக் கருவியம் - உள்ளீட்டு உபாயங்கள், வெளியீட்டு உபாயங்கள், களஞ்சிய உபாயங்கள், நினைவகங்கள், முறைமைப்படுத்தி எனப் பலவற்றின் செயற்பாடுகளின் விளக்கங்கள் பலரும் அறியும் விதத்தில் கணினியைப் பகுதிகளாகப் பிரித்து வைத்து, விளக்கம் அளிக்கப்படுகிறது. இயந்திர மனிதக் கையின் செயற்பாட்டை கணினியின் துணைகொண்டு எவ்வாறு கட்டுப்படுத்தலாம் எனக் காட்டப்படுகிறது.

3. சிறுவர் பகுதி - சிறுவர், சிறுமியரைக் கவரும் இ-நூல்கள், கணினி விளையாட்டுக்கள் என்பவற்றுடன், வீடியோ செப்பனாக்கிகளின் செயற்பாடுகள் என்பனவும் விளக்கப்படுகின்றன.

4. கணினி வலையமைவு - இவற்றின் அறிமுகத்திலிருந்து பயன்பாடுகள் வரை விரிவான விபரங்கள் மாதிரியுருவின் துணைகொண்டு விளக்கமளிக்கப்படுகின்றன. இவற்றுடன் இணையம், மின்னஞ்சல், Vidio Conference மற்றும் Bluetooth எனப்படுகின்ற நாளைய தகவல் தொடர்பு பற்றியும், கணினியில் ஏற்படும் வைரஸ் தாக்கங்களும், அவற்றைக் கட்டுப்படுத்தும் வழிகளும் விளக்கப்படுகின்றன.

























# பார்த்தவர் பகிர்கின்றனர்



**பிரதீபா**
**விலங்கியல் துறை**

எமது விஞ்ஞான பீடத்தினரால் நடத்தப்படும் இந்தக் கண்காட்சியை - ஏராளமான மாணவர் களும், பொது மக்களும் வந்து பார்வையிடுகின்றனர். பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரையில் எல்லாப் பாடசாலைகளிலும் ஆய்வுகூட வசதிகள் இல்லை. அதனால் பாடசாலைகளில் எழுத்து மூலமாகப் படித்ததை இங்கு வந்து செய்முறைகளினூடாகப் பார்க்கின்றபோது, நிறையவே கற்றுக் கொண்டுள்ளதாக எம்மால் உணரமுடிகிறது.

இந்தக் கண்காட்சியைப் பாடசாலைகளில் சாதாரணதரம், உயர்தர வகுப்புகளில் கற்கும் மாணவர்கள் மற்றும் பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்களும் வந்து பார்க்கின்றனர்.

இவை தவிர, பிற மாவட்டங்களிலிருந்தும் பெருமளவானோர் வந்து பார்வையிடுகின்றனர்.

பொதுவாக கருத்துக் கூறுவதென்றால், இந்தக் கண்காட்சி உயர்தர வகுப்புக்களில் விஞ்ஞானப் பிரிவில் கற்போருக்கு மிகவும் பிரயோசனமான முறையில் அமைந்துள்ளது.

எங்களால் நடத்தப்படும் முதலாவது கண்காட்சி நிகழ்வு இதுவென்பதால், அடுத்த ஆண்டு இவ்வாறானதொரு கண்காட்சி நடத்தப்படும்போது இதைவிட மேலும் பல புதிய அம்சங்களை உள்ளடக்கிய வகையில் விரிவாக இதை நடத்துவோம்.

---



**தபோதினி**
**விஞ்ஞானபீடம்**

இந்தக் கண்காட்சியில் பல அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரிவு சூழல் பற்றியது. சூழல் மாசடைவதால் மனிதன் பல்வேறு உபாதைகளுக்கு உள்ளாக வேண்டியுள்ளது. சூழல் மாசடைவதால், மனிதன் மட்டுமல்ல எந்த உயிரினமும் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதில் எந்த எந்த நடவடிக்கைகளால் சூழல் மாசடைகின்றது. இவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது பற்றியும், அதற்கு எவ்வாறான மாற்று நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பது பற்றி செய்முறை யூடாக விளக்கம் கொடுக்கப்படுகிறது.

காடழிப்பு மற்றும் அதற்கான காரணம், அதனைச் சூழல் மாசடையாதவாறு எவ்வாறு மாற்றிக் கொள்ளலாம், என்பது பற்றி விளக்கப்பட்டுள்ளது.

சூழல் மாசடைதலில் பிரதானமாக நீர் நிலைகள் மாசடைவதைக் குறிப்பிடலாம். பயிர்ச் செய்கைகளில இரசாயன வளமாக்கிகளை அதிகமாகப் பாவிப்பதனால், நீர் நிலைகள் மாசடைகிறது. குடாநாட்டைப் பொறுத்தளவில் விவசாய நிலங்களுக்கு வாய்க்கால்கள் வழியாக நீரைப் பாய்ச்சுகின்ற நிலைமை உள்ளது.

கிருமி நாசினிகளைக் கூடுதலாகப் பாவிப்பதால், உணவுச் சங்கிலியூடான நச்சுத் தன்மை கடத்தப்படும். இதனைவிட விவசாயிக்கு நன்மை தருகின்ற பூச்சி புழுக்களையும், கிருமி நாசினிகள் அழித்து விடும். இதனால் பீடை நாசினிகளிலிருந்து இவற்றை எவ்வாறு பாதுகாப்பது. கட்டுப்படுத்துவது என்பதைத் தான் ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாடு என்பதனூடான விளக்க மளிக்கின்றோம். இதில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட முறைகளைப் பயன்படுத்தி, சூழலுக்குத் தாக்கமில்லாதவாறு கட்டுப்படுத்தலாம்.

பீடைத் தாக்கம் இருந்தாலும், நாங்கள் பாவிக்கின்ற கிருமி நாசினிகளின் அளவைக் கட்டுப் படுத்திப் பாவிப்பதனூடாக நீர் நிலைகள் மாசடைவதைக் குறைத்துக் கொள்ளலாம்.

---



**திருமதி கௌரி மனோகரி விஜயகுமார்**
**ஆசிரியை, அராலி கிழக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை**

எமது பாடசாலையில் தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவர்களை இந்தக் கண்காட்சியைப் பார்ப்பதற்கு அழைத்து வந்திருக்கின்றேன்.

இதில் பொதுவாக எல்லாமே பிரயோசனமாகவே இருந்தது. பாம்புகளின் வகைகள், டைனோசர் கூர்ப்பு மிகவும், நன்றாக இருந்தது. நரம்புத் தொகுதி என்பன சிறப்பாக அமைந்துள்ளது. Practical ஆகப் பிள்ளைகள் இதனைக் கற்கக்கூடியதாக இருந்தது. Practical முறையினூடாகத் தான் இவை கூடுதலாக மனதில் பதியும்.

தரம் 9 மாணவர்களைப் பொறுத்தளவில், சில சில பகுதிகள் தான் அவர்களின் பாடத்திட்டத்தோடு தொடர்புபட்டதாக அமைந்துள்ளது. மற்றும்படி உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

எல்லாப் பாடசாலைகளும் மாணவர்களை அழைத்து வந்து இந்தக் கண்காட்சியைக் காட்டுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

---



**பிரதீபா -**
**அராலி**

இந்தக் கண்காட்சியை மாணவர்கள் பார்ப்பதனூடாக அவர்கள் நிறையவே அறிந்துகொள்ள முடிகின்றது. இதனை அனைத்துப் பாடசாலைகளிலும் கற்கும் மாணவர்கள் வந்து பார்க்கவேண்டும். யாழ். மாவட்ட மாணவர்கள் மட்டுமன்றி, பிற மாவட்ட மாணவர்களும் இதனை வந்து பார்த்துப் பயனடைய வேண்டும்.

இவ்வாறானதொரு கண்காட்சி நிகழ்வு - ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டால் சிறப்பாக இருக்கும் எனக்கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

---



**தேவராஜா கோமதி**
**மாணவி முத்துத்தம்பி மகாவித்தியாலயம்.**

இந்தக் கண்காட்சியில் நாங்கள் பாடசாலையில் செய்த பரிசோதனையை விரிவாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது. கணிதப் பிரிவில் நிறைய மேதைமாரின் கண்டுபிடிப்புகளை அறியக் கூடியதாக இருந்தது. மொத்தத்தில்
Computer Section Exibition இல் நிறையப் பயனுள்ளதாகவே இருந்தது.

இவ்வாறான கண்காட்சி நிகழ்வை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நடத்த வேண்டும். இதன் மூலம் நிறைய மாணவர்கள் பயனடையக் கூடியதாக இருக்கும். இந்தக் கண்காட்சி நிகழ்வை பரந்தளவில் விளம்பரப்படுத்தி, பிற மாவட்டத்திலிருந்து வந்து பார்த்துப் பயனடையக் கூடியவாறு விரிவுபடுத்தி நடத்துவதோடு, ஒவ்வொரு ஆண்டும் இவ்வாறானதொரு கண்காட்சியைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதே என்னைப் போன்ற மாணவர்களின் எதிர்பார்ப்பாகும்.

---



**செல்வி சிவசுப்பிரமணியம்**
**ஆசிரியை**

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

கணிதப் பிரிவைப் பொறுத்தளவில், இவ்வாறானதொரு Exibition ஐ நான் பார்க்கவில்லை. ஆன படியால் இந்தக் கண்காட்சி மிகவும் பயனுள்ளதாகவும், நிறைய விடயங்களை அறிந்து கொள்ளக் கூடியதாகவும் இருந்தது.

இருந்தாலும், நுழைவுச் சீட்டுக்காக அறவிடுகின்ற தொகை சற்று அதிகப்படியாகவே உள்ளது. ஒரு வகுப்பில் எல்லா வாழ்க்கைத்தர மட்டத்திலும் பிள்ளைகள் இருப்பார்கள். இந்த நிலையில் - மாணவர்களிடம் 30 ரூபாவும், பொது மக்களிடம் 50 ரூபாவும் அறவிடுவது நல்லதல்ல.

சிலவேளைகளில் இந்த நுழைவுக்கட்டணம் குறைவாக இருந்திருந்தால், கிராமப்புறப் பாடசாலை மாணவர்களும் இதனை வந்து பார்ப்பதோடு, பொதுமக்களும் நிறையப்பேர் வந்து பார்த்திருப்பார்கள்.

தூர இடங்களிலிருந்து மாணவர்களை அழைத்து வரும்போது, அவர்களுக்கு வாகன வசதி செய்யவேண்டியுள்ளது. அப்படிப் பார்க்கும்போது அதற்கும் காசுவேண்டும் என்ற நிலைப்பாட்டால், சில மாணவர்கள் இதைப் பார்க்க ஆவல் இருந்தும் ஒதுங்கிக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் செய்முறையூடாக சிலவற்றைப் பார்ப்பதை இழந்த துர்ப்பாக்கியம் இடம்பெற்றுவிட்டது.

எனவே, இனிவரும் காலங்களில் இவ்வாறானதொரு கண்காட்சி நடத்தப்படும்போது நுழைவுக்கட்டண அறவீடு குறித்து சம்பந்தப்பட்டோர் சரியானதொரு நிலைப்பாட்டுக்கு வரவேண்டும் என அனைத்துத் தரப்பினரதும் சார்பில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

---



**செ.செல்வநாயகம்**
**விஞ்ஞான ஆசிரியர்**
**கொழும்புத்துறை**

இந்தக் கண்காட்சியைப் போய்ப் பார்க்கவேண்டும் என அனைத்து மாணவர்களும் இன்று ஆர்வத்துடன் இருந்தார்கள். காலையில் கூட்டி வந்தோம். இங்கு கடல்வளம், தாவரவியல், பௌதீகவியல் என அனைத்தும் மாணவர்களுக்கு விளங்கக்கூடிய வகையில் மிகத் திறமையாகச் செய்திருக்கிறார்கள். கடல்வளத்தில் கடல்வாழ் உயிரினங்களின் ஒன்றிய வாழ்வுக் காட்சி சிறப்பாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இப்படி ஒவ்வொரு Section மிகவும் சிறப்பாக இருக்கிறது. இன்றைய பொருளாதார நிலையில் இந்தக் கண்காட்சிக்காக மாணவர்களிடம் அறவிடப்படும் 30 ரூபா தொகை அதிகளவாக இல்லாவிட்டாலும், தூரப் பாடசாலைகளிலிருந்து மாணவர்களை அழைத்து வருவதில் சிரமங்கள் உண்டு.

எங்களுடைய மாணவர்கள் நுழைவுச் சீட்டு 30 ரூபா என்று சொன்னதும், அதற்கு என்ன பரவாயில்லை எனக் கூறிக் கண்காட்சியைப் பார்ப்பதிலேயே குறியாக இருந்தனர்.

வறுமைப்பட்ட சில பிள்ளைகளுக்கு நான் உதவி செய்தேன். ஏனெனில், அவர்கள் இதனைத் தவறவிடக் கூடாது என்பதற்காக.

# கண்காட்சி குறித்த கருத்துக்கள்

**பொ.மகிணன்**
**தலைவர்**
**கணித புள்ளிவியற்துறை**

எமது கண்காட்சியின் நோக்கம் கணித அறிவினை மாணவர் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் விரிவுபடுத்த வேண்டுமென்பதே. 1100 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டுவரையான கணித மேதைகளின் வரலாறு ஆண்டு ரீதியாக தமிழிலும், ஆங்கிலத்திலும் தொகுக்கப்பட்டுள்ளது.

இதைவிட மிக வலுவுள்ள கணித கணிப்புக் கருவிகளும் அதாவது கணித சமன்பாடுகள், முப்பரிமாணங்கள், இரு பரிமாண வரைபுகளைச் சுலபமாகக் கையாள்வதற்கான மென்பொருட்கள் என்பனவும் - புள்ளிவிபரவியலில் நியமபுள்ளிமுறை தொடர்பான விளக்கங்கள் விரிவாக அடங்குகின்றன.

கணித மாதிரி ஆக்கங்களின் பிரயோகங்களில் உலகில் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், அதனை இலகுவாகத் தீர்த்துக்கொள்ளும் முறைகளும் விளங்கப்படுத்துவதுடன், கைத்தொழில், மருத்துவம் போன்ற துறைகளில் கணித சமன்பாடுகளின் பயன்களும் காட்டப்படுகின்றன. ஒரு நவீன வகுப்பறைகளும், பொழுதுபோக்குக் கணிதமும் இந்தக் கண்காட்சியில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**திருமதி நி.இரவிமன்னன்**
**தலைவர் - தாவரவியற்துறை**

எமது கண்காட்சி விசேடமாக பாடசாலை க.பொ.த சாதாரணதரம், உயர்தரம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு, பொது மக்களுக்கும் உயிரியல் தொடர்பான அறிவை வழங்குவதே விசேட நோக்கமாகும்.

இதில் தாவரவியல், நுண் உயிரியல், களைகள், இளைய வளர்ப்பு, கலத்தின் நுண்கட்டமைப்பு, தாவர சுவாச ஒளித்தொகுப்புத் தாக்கங்கள், தாவர வேரினுடனான நீர்க் கடத்தல்கள், ஈழநிலப் பாதுகாப்பு எனப் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி நிற்கின்றது.

இதன்மூலம் மிகத் தெளிவாக விவசாயம், தொழில்சார் துறை, மருத்துவம், நுண்ணங்கிகளின் பங்கு என்பவற்றைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

**இணைப்பாளர்**
**செல்வி நி.இரத்தினசபாபதி**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**விலங்கியல்துறை.**

விஞ்ஞான பீடம் நடத்தும் விஞ்ஞானக் கண்காட்சியில், விலங்கியல் துறையினர் பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமன்றி, ஏனையோருக்கும் பயன்பெறும் வகையில் கண்காட்சியை அமைத்துள்ளனர். அனைவரும் அறிந்திருக்க வேண்டிய மனிதனின் பரிணாம வளர்ச்சி எவ்வாறு தோன்றியது என்று ஆதி வளி மண்டலம் முதல் மிகவும் தத்ரூபமாக ஆதிகாலத்திற்கே செல்லும் வகையில் நிஜமா? நிழலா? என்று வியக்கும் வகையில் அமைத்துள்ளனர். இவற்றுடன் ஏனைய முள்ளந்தண்டிலிகளின் முள்ளந்தண்டுளிகளின் கூர்ப்பும் விளக்கப்பட்டுள்ளது.

க.பொ.த. (உ/த) மாணவர்களின் நன்மை கருதி அங்கிகளின் அக உடலமைப்பும், உடற்றொழிலியலும் மனிதனைத் தாக்கும் பிரதான ஒட்டுண்ணிகள், அவற்றின் வாழ்க்கை வட்டம், காவிகள், நோய்த்தடுப்பும், கட்டுப்பாடும் குறிப்பாக அண்மைக் காலங்களில் வட-கிழக்கில் பரவிவரும் மணல் ஈ (Sand fly) இனால் காவப்படும் leishmania எனும் புரற்றேசோவாவினால் தோற்றுவிக்கப்படும் "Leishmaniasis" (லிஸ்மானியாசிஸ்) எனும் நோய் பற்றிய விழிப்புணர்வும், விளக்கமும் வழங்கப்படுகிறது.

சூழலில் குறிப்பாக நீர், நிலம், வளி ஆகியவற்றில் மனிதனின் சனத்தொகை பெருக்கத்தாலும், அவனின் அறிவு தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏற்படுகின்ற, ஏற்படப்போகின்ற பாதிப்புக்கள் பற்றியும், இயற்கை வளங்களில் குறிப்பாக முருகைக்கல் சூழற்தொகுதியின் அமைப்பும், அவற்றின் பொருளாதார முக்கியத்துவமும், அதில் மனிதனால் ஏற்படும் தாக்கமும் மிகவும் தெளிவாக விளக்கப்பட்டு, அவற்றுக்குரிய தீர்வுகளும் கூறப்படுகிறது. இக்கண்காட்சி நிச்சயமாக எமது மாணவ சமுதாயத்துக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

**விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத் தலைவர்**
**இ.நவரூபன்.**

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு - மாபெரும் விஞ்ஞானக்கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்தோரால் இந்தக்கண்காட்சி ஏழு துறைகளாகப் பிரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

நடைபெறும் கண்காட்சி கல்விப் பொதுத்தராதர சாதாரணதர, உயர்தர மாணவர்களுக்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டாலும், பொதுமக்களும் பார்த்துப் பயன்பெறக்கூடிய பல அம்சங்கள் காணப்படுகின்றன.

இந்தக் கண்காட்சியானது - துணைவேந்தர், எமது பீடாதிபதி மற்றும் விரிவுரையாளர்களின் நெறியாள்கையில் விஞ்ஞானபீட மாணவர்களின் முயற்சியில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே, முழு மாணவர்களும், மக்களும் பார்த்துப் பயன்பெறவேண்டும் என்பதே எமது விருப்பம். இதற்கமைய வடக்கு-கிழக்கின் பல பகுதிகளில் இருந்தும் மாணவர்கள், மக்கள் வந்து பார்வையிடுகின்றனர். பல அறிவுசார் விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறுகின்றபோது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

**கண்காட்சிக் குழுத் தலைவர்**
**பௌதீகத்துறை மூன்றாம் வருட மாணவன்**
**குமாரசாமி விசாகன்**

வடக்கு-கிழக்கு மாவட்டத்தில் ஆய்வுகூட வசதிகள் எதுவுமற்ற நிலையில் தான் சகல பாடசாலைகளும் காணப்படுகிறது. ஆய்வுகூடம் சம்பந்தமான பரிசோதனை வாயிலாக க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தயார்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு இந்தக் கண்காட்சியை நாங்கள் நடத்துகிறோம். இந்த நோக்கம் முற்றுமுழுதாக நிறைவேறி இருக்கிறது.

வடக்கு-கிழக்கிலிருந்து ஏராளமான - அதாவது சகல பாடசாலைகளிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து செல்கிறார்கள் நாங்கள் எதிர்பார்த்ததைவிட கூடிய வெற்றியைத் தந்திருக்கிறது. எங்களுடைய வளங்களைப் பயன்படுத்தித்தான் இந்தக் கண்காட்சியை நடத்துகிறோம். ஆனால், தனியார் சேர்ந்து இதில் பங்கேற்றால், அதில் எந்தவித பிரச்சினையும் இல்லை. தொடர்ந்து இந்தக் கண்காட்சியைப் பார்ப்பதற்கு மக்கள் கூட்டம் வருமாயின் இந்தக் கண்காட்சியை தொடர்ந்தும் நடத்துவோம்.

**மாணவன்,**
**கொழும்புத்துறை மகாவித்தியாலயம்**

பாடசாலையில் நாங்கள் பாடங்களைப் படிக்கும்போது, Notes எழுதித்தான் படித்தோம். ஆனால் அதனை இங்கு Practical ஆகப் பார்க்கும் போது அதனைக் கிரகித்து, மனதில் பதிக்கக் கூடியதாக உள்ளது.

நாம் கற்பதைக் காட்சிப்படுத்திக் கற்கும்போது அது இலகுவில் மனதில் பதியும்.

ஊர்வன, பாம்புகளின் இனம், மீனினங்கள், சூழல் எவ்வாறு மாசாடைகிறது என்பதை செய்முறை விளக்கத்தினூடாக இன்று கற்றுக் கொண்டோம்.

சில மாணவர்கள் இதனைப் பார்க்கத் தவறியிருப்பவர்கள் அவர்களும் இதனை வந்து பார்த்துப் பயனடைய வேண்டும்.

அத்துடன் இவ்வாறானதொரு கண்காட்சி ஆண்டு தோறும் நடத்தப்பட வேண்டும் என எல்லோர் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன்.






# விஞ்ஞான.....



# கண்காட்சியில்...




நமது ஈழநாடு உங்களுக்காக நாள்தோறும் வழங்கும் சிறப்பம்சங்கள்

விளையாட்டு அரங்கம்
ஞாயிறு

இலக்கியச் சோலை
திங்கள்

பல்சுவை அரங்கு
செவ்வாய்

மாணவர் மலர்
புதன்

வியாழன்
தொழில் மலர்

வெள்ளி

சனி
சிறுவர் அரங்கம்

இன்னும்
அரசியல் கட்டுரைகள்
செய்திக் கட்டுரைகள்
விமர்சனக் கட்டுரைகள்
ஆய்வு
அறிவியல் விடயங்கள்
உட்பட உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகள்
அனைத்தையும் தரமாகவும் தனித்துவமாகவும்
வழங்கும் ஒரே நாளிதழ்....

உங்கள் பிரதிக்குப் பதிவு செய்யுங்கள்